Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-07 | 23-07-2005 | சனிக்கிழமை | ஓசை-155



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

# புலிகளின் போக்குவரத்துக் குறித்து முடிவெதுவும் எட்டப்படவில்லை

## நேற்றைய சந்திப்பின் பின் ஹொக்லண்ட்

*சிறிலங்கா இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் போக்குவரத்துத் தொடர்பாக முடிவெதுவும் எட்டப்படவில்லை. எனினும் எதிர்வரும் திங்கட்கிழமை மேலும் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்றுப் ஹொக்லண்ட் நேற்று பி.பி. சிக்குத் தெரிவித்தார்.*

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள்,அரச சமாதான செயலக அதிகாரிகளையும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளையும் நேற்றைய தினம் சந்தித்தனர்.

இச் சந்திப்புத் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் 'ஹொக்லண்ட்' கருத்துத் தெரிவிக்கையில்; இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் குறித்து ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அதனைப்பற்றியே அங்கு பேசப்பட்டது. அந்த விடயம் தொடர்பாக நாங்கள் இது வரை எந்த முடிவையும் காணவில்லை. ஆனால் வரும் திங்கள் இடம்பெறவிருக்கும் கூட்டத்தில் நல்ல முடிவு கிடைக்குமென எதிர்பார்க்கிறேன் என்றார்.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## இரு தமிழ் இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது!

### அம்பாறையில் சம்பவம்

அம்பாறை மாவட்டத்தில் பொலிசார் மேற்கொண்டுவரும் கெடுபிடிச் சோதனைகளில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சொறிக்கல்முனை விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் கூட்டு வீதித்தடையில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்னமலையைச் சேர்ந்த ரி.எஸ். துமிலன் மற்றும் என். ஜெயக்குமார் ஆகிய இருவரும் உந்துருளியில் பயணம்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## புல்லுமலை சோதனைச் சாவடியில் படையினரால் பொருட்கள் பறிமுதல்!

### இரு தமிழர்களும் கைது

கொழும்பிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பெருந்தொகையான பொருட்கள் புல்லுமலைச் சோதனைச் சாவடியில் விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பாரவூர்தியை நேற்று முன்தினம் மாலை புல்லுமலை சோதனைச் சாவடியில் விசேட அதிரடிப்படையினர் சோதனையிட்டுள்ளனர்.

பாரவூர்தியில் இருந்து மின்சார வயர்சுருள் 300, 100 மீற்றர் பச்சைநிற கூடாரத் துணிகள் 50சுருள், இரண்டு அங்குல நாடாச்சுருள் 200, சிறு நாடாச்சுருள் 250, லைனிங்துணி சுருள் பத்து 1,000 நிக்கல் குழாய்களைக்கொண்ட பத்து பொதிகள், தொப்பிகளைத் தயாரிக்கப்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் உரிமைகளை அங்கீகரிக்க சர்வதேசத்திற்கு முல்லை. மக்கள்அழைப்பு

### எழுச்சிப்பேரணிக்கும்ஏற்பாடு

(முல்லை)

தமிழரின் உரிமைகளை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியும் மக்களிடையே எழுச்சி உருவாக்கும் முகமாகவும் முல்லைத்தீவில் மாபெரும் எழுச்சிப் பேரணிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன். எதிர்வரும் 25 ஆம் திகதி இந்த எழுச்சிப் பேரணி இடம் பெறவுள்ளது.

முல்லையில் நேற்று முல்லை மாவட்ட கடற்புலிகளின் பிரதேசத்திற்குட்பட்ட கிராமத்தலைவர்களுடனான சமகால கருத்தூட்டல் நிகழ்வு காலை 10.00 மணியளவில் முல்லை. மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் மா.ரங்கன் தலைமையில் ஆரம்பமானது.

கருத்துரைகளை உதவிக்கல்விப் பணிப்பாளர் அருணாசலம்,முல்லைமாவட்ட க.தொ. கூ. ச.சமாசத் தலைவர் அ.மரியராசா, முல்லை வர்த்தகசங்கத்தலைவர் மனோ ஆகியோர் வழங்கினர். இதில் எதிர்வரும் 25 ஆம்திகதி எழுச்சிப்பேரணி நடாத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பின் ஒரு பகுதியை செயற்படுத்த சனாதிபதி ஆலோசனையாம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பின் பிராந்தியக்குழு தொடர்பான நான்கு விடயங்களுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் தடை விதிக்கப்பட்ட நான்கு விடயங்களைத் தவிர்த்து ஏனைய விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தமுடியுமா? என்பது பற்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்திவருவதாக சனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் உயர்நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்காத முறையில் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது பற்றி அவர் கவனம்செலுத்தி வருகிறார் என சட்ட ஆலோசனையில் கலந்து கொண்ட சட்ட நிபுணர் ஒருவர் தெரிவித்தார். இதன் அவசியம் வட கிழக்கு மாகாணத்தில் வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுக்க வெளிநாட்டு அமைப்புகள் பல முன்வந்துள்ளதால் ஏற்பட்டுள்ளது என அரசாங்கத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் கிளிநொச்சியில் இன்று அறிமுகம்

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் இன்று கிளிநொச்சியில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. இன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள திட்டமிடலுக்கும், மேம்பாட்டுக்குமான செயலகத்தில் இவ் அறிமுக விழா இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணையம் அறிமுகம் செய்து வைக்கப்படுவதன் மூலம் தமிழீழத்தின் சூழல் பாதுகாப்பு அதனை பேணுவதன் முக்கியத்துவம் போன்ற சூழல் பற்றிய பல்வேறு முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இந்நிகழ்வில் சூழலியலாளர்கள், விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(லோ)

## இனந்தெரியாதோர் தாக்குதல் பொத்துவிலில் பொலிசார் பலி!

### பொலிசாரின் தாக்குதலில் பொதுமகன் உயிரிழப்பு

அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற தாக்குதலொன்றில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார்.

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் பலியானார். இரவுநேர வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிசாரை நோக்கி இனந்தெரியாத நபர்களினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இதனையடுத்து பொலிசாரும் பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு ஆயுதங்கள் கோருகின்றன வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்புக்கள்

### இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்களமக்களின் சுயபாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வழங்குமாறு கோரி வடக்கு-கிழக்குச் சிங்கள அமைப்பினர் இன்று கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்களமக்களுக்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பளிக்க முடியாதுவிடின் சுயபாதுகாப்பிற்கென ஆயுதங்களை வழங்குமாறு கோரியும் படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் இன்று மாலை மூன்று மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் நாடு முழுவதும் இருக்கும் சிங்கள அமைப்புக்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பின் செயலாளர் சுனில் அழுத்கமகே தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும்

(!2 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

கச்சேரி அருகாமை கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கி வந்த கோமான் தையலகம் 15.07.2005 தொடக்கம் கச்சேரி முன்பாக யாழ்சாலை (A-9) கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம். (6362)

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி 155ஆம் விவேகானந்த நகரில் 2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. தென்னை, பலா, மா ஆகிய பயன் தருமரங்களுடன் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளும் முகவரி. K தவம். இல. 162, உதயநகர் மேற்கு முத்துமாரி அம்மன் வீதி, கிளிநொச்சி. T.P 021-2285712, 021-2285711. (6380)

### தவறிவிட்டது

17.07.2005 அன்று இரவு கனகபுரம் பாடசாலைச்சந்திக்கும் கிளிநொச்சி A-9 சாலை அறிவமுது பொத்தகசாலைக்கும் இடையில் கறுப்புநிற நூல் கயிறு கட்டப்பட்ட Dvrx Flowyer and Voice Recorder(ஒலிப்பதிவு சாதனம்) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது பசுந்தீவு அரைக்கும் ஆலை இரத்தினபுரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6374)

### லெப். செல்லக்கிளியின் நினைவு நிகழ்வு

(நல்லூர்)

மாவீரர் லெப்ரினன்ட் செல்லக்கிளியின் 22ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.00 மணிக்கு செல்லக்கிளியின் நினைவுத்தூபி அமைந்துள்ள பலாலி வீதியில் உள்ள தபால் கட்டைச்சந்தியில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் கல்வியங் காட்டுப்பகுதியில் நினைவுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## வீச்சுவலைகள் வழங்கல்

முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் கெயர் நிறுவனத்தின் நிதி உதவியில் 49 வீச்சுவலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை முல்லை மாவட்ட க.தொ.கூ.சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமானது.

செல்வபுரம் கிராமத்தில் 17 மீனவர்களுக்கும், வட்டுவாகலில் 22 மீனவர்களுக்கும், மணற்குடியிருப்பு கிராமத்தில் பத்து மீனவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இதே போன்று ஆனந்தபுரம் கிராமத்தில் 34 மீனவர்களுக்கும், இரணைப்பாலை கிராமத்தில் 34 மீனவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வலைகள் சமாசத்தில் வழங்குவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (20)

# பெண்கள் பொருளாதார பலம்பெற்று தம் ஆளுமையை வளர்க்க வேண்டும்

## -தொழிற்பயிற்சி நிறைவு நிகழ்வில் தமிழினி-





தமிழர் தாயகத்தில் பெண்கள் பொருளாதார பலம் படைத்தவர்களாக தமது சொந்தக்கால்களிலேயே நிற்கக்கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்ற பெண்களுக்கான சான்றிதழ் வழங்கல் மற்றும் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது; எமது சமூகத்திலே பெண்களுக்குள் எழும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் பெண்கள் பொருளாதார பலமற்றவர்களாக இருப்பதாகும். பிறரில் தங்கி வாழும் நிலையில் தமது ஆளுமைகளை சிதைத்து, சமூகத்திலே பெரும் அவலங்களை சுமப்பவர்களாக உள்ளனர். இந்த நிலமை மாறவேண்டும். பெண்கள் தமது ஆளுமைகளை பெருக்கிக்கொண்டு சமமான நிலையில் சமூகத்தில் பங்களிப்புக்களை செய்யவேண்டும். எமது சமூகத்திலே ஒரு பழக்கம் இருக்கின்றது. பெண்கள் கல்வி கற்பார்கள், கற்கின்ற கல்வியை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. கடந்த காலங்களில் தொழிற்பயிற்சியை பெற்றுக்கொண்ட பெண்கள் அப்பயிற்சியை முழுமையாக பயன்படுத்தாத அவல நிலை காணப்படுகின்றது. நாம் சான்றிதழுக்கு மட்டும் கல்வியைப் பயிலக்கூடாது. பெற்ற கல்வியை பயன்படுத்தக்கூடிய வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்தார். முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரேற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். பயிற்சி பெற்ற மாணவர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட் கண்காட்சியினை அருட்தந்தை ஜெயபாலன், சமூக சேவையாளர் எஸ்.கனகரட்ணம் ஆகியோர் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தனர்.

அரங்க நிகழவுகள் எஸ். செல்வராணி தலைமையில் நடைபெற்றது. கருத்துரைகளை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, கிளிநொச்சி வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன், தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ச.தீ.சோ)

## வெகுஜன எழுச்சியை உருவாக்க கிளி.யில் செயற்பாட்டுக் குழு அமைப்பு

(அலுவல செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன எழுச்சி செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச பொது அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன எழுச்சி செயற்பாட்டுக் குழுத்தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், துணைப் பொறுப் பாளர் அருள் கிளிநொச்சி பிரதேசப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் பசுபதிப்பிள்ளை, கிளி. மாவட்ட மகளிர் அரசியல் துறைப பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் கலந்து கொண்டு தற்கால அரசியல் நிலை குறித்தும் மக்களின் தற்போதைய எழுச்சியின் முக்கியம் குறித்தும் கருத் துரை வழங்கினார்.

தொடர்ந்து கிளிநொச்சி பிரதேச வெகுஜன எழுச்சிக்குழு தெரிவு செய்யப்பெற்றது.

குழுத் தலைவராக மா.சிவபாலன், துணைத் தலைவராக கே.வீ.கே. திருலோகமூர்த்தி, செயலாளராக வேலாயுதம், துணைச் செயலராக மு.பரமேஸ்வரி, பொருளாளராக பொன்னுத்துரை மற்றும் நான்கு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பெற்றதுடன், மக்கள் மத்தியில் எழுச்சி தொடர்பான செயற் பாடுகளை தீவிரமாக முன் எடுத்துச் செல்வதென முடிவெடுக்கப்பட்டது.

(சோ)

## முச்சக்கர வண்டிஉரிமையாளருடன் விசேட கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேசத்திற்கு உட்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாள்களுக்கான விசேட கலந்துரையாடல் முள்ளியவளைப்பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் நேற்றுமுன்தினம் மு.ப. 10.00 மணிக்கு முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைச் செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் முள்ளியவளை பிரதேசஅரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முல்லைவீரன் தலைமையில் இடம்பெற்றது. சமகால அரசியல் நெருக்கடி தொடர்பாகவும் முச்சக்கரவண்டி பதிவு மற்றும் வீதி ஒழுங்கு தொடர்பாகவும் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முல்லை வீரன் கருத்துரை வழங்கினார். முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் தெரிவு செய்யப்பட்டு புதிய சங்கத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிகழ்வு நிறை வானது. இதேவேளை முள்ளியவளைப் பிரதேசத்திற்கு உட்பட்ட இருசக்கர உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்று இருசக்கர உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாக நடவடிக்கை தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ஆ)

## 26இல் தகைமை பரிசீலிப்பு

(திருமலை)

நிரந்தர நியமனம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் அம்பாறை, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் தகைமைகளைப் பரிசீலிப்பது ஜீலை 26 ஆம் திகதி திருமலை மாகா ணக் கல்வி அமைச்சில் நடைபெறும் என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் தகைமைகள் பரிசீலிப்பது ஜீலை 25ஆம் திக்தி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (25)

## வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் அக்கராயனில் பொதுமக்களுக்கு உதவி

(கிளிநொச்சி)

வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் நெராட் கெயார் நிறுவனங்களின் நிதியுதவியுடன் கடந்த மாதம் அக்கராயன் பிரதேசத்தில் கோழி, ஆடு வளர்ப்பிற்கு பத்துப் பயனாளிகளிற்கு 102250 ரூபாவும். மீன் வியாபாரத்திற்கு இரு பயனாளிகளிற்கு 30,400 ரூபாவும் தையல், விளக்குமாறு உற்பத்தி, சிகை அலங்காரம் போன்றவற்றிற்கு ஐந்து பயனாளிகளிற்கு 83,440 ரூபாவும், வழங்கப்பட்டன.

மேலும் கண்ணகைபுரம் பகுதியின் கோழி, ஆடு வளர்ப்பிற்கு 112,750 ரூபாவும், மீன் வியாபாரத்திற்கு இரண்டு பயனாளிகளிற்கு 30,000 ரூபாவும், சிறு வியாபாரத்திற்கு பயனாளி ஒருவரிற்கு 15,000 ரூபாவும் கடனாகவழங்கப்பட்டுள்ளதாக அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (15)

## முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர் இன்மையால் அவலம்!

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் அவலம் எப்போ? தீரும் என மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையில் தொடர்ச்சியாக வைத்தியர் இல்லாமையினால் பெருமளவான நோயாளர்கள் நாள் தோறும் அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையில் சுமார் ஆறு மைல்களுக்கு அப்பாலிருந்தும் பல நூறு நோயாளர்கள் சிகிச்சைக்காகச் சென்று வைத்தியர் இன்மையால் ஏமாற்றத்துடன் அவலப்பட்டு திரும்பிச் செல்கின்றனர். சிலர் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கும் செல்கின்றனர். ஆனால் வறுமைக்குட்பட்டவர்கள் வசதி வாய்ப்பு அற்றவர்கள் சிகிச்சை பெற முடியாது அவலப்பட்டு வருகின்றனர்.

சில மாதமாக வைத்தியர் அற்ற இவ் அவலம் எப்போது தீரும் எனப் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

(ஆ)

## மின்சாரம் வழங்க ஏற்பாடு

மன்னார் மாவட்டம் நானாட்டான், முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு முதன் முறையாக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

பரிகாரிகண்டல் முதல் முத்தரிப்புதுறை வரையுள்ள 22 கிலோமீற்றர் தூரத்திற்கு இந்த மின்சாரக் கம்பிகள் இழுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவியினை வன்னி புனர்வாழ்வு அமைச்சு வழங்கவிருக்கிறது

ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு 3.5 இலட்சம் ரூபா செலவு செய்ய இருப்பதாகவும் இவ்வாறு மின்சாரம் வழங்குவதன் காரணமாக இந்த இரண்டு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முப்பது கிராமங்களுக்கு மேல் நன்மை அடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது (21)

## மீள்குடியமர்ந்த பொதுமக்கள் அடிப்படை பிரச்சினைகளால் பாதிப்பு

(செட்டிகுளம்)

மன்னார் அகத்தி முறிப்பு கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பல்வேறு வகையிலான அடிப்படை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்

1990 ஆண்டு இந்தக் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் 2004ஆம் ஆண்டு மீளக் குடியமர்வதற்கு வந்து தற்போது படிப்படையாக மீளக் குடியமர்ந்து வருகிறார்கள். தற்போது இந்தக் கிராமத்தில் 22 குடும்பங்கள் மீளவும் குடியமர்ந்துள்ளன.

போக்குவரத்து, பாடசாலை, மின்சாராம், வைத்தியசாலை, குடிநீர், தொழில் வாய்ப்பு போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது மீளக் குடியமர்ந்துள்ள இந்த மக்களுக்கு இதுவரையும் எந்த விதமான வசதிகளும் செய்து தரப்படவில்லை என்று அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தினை நம்பி வாழ்ந்த இந்தக் குடும்பங்கள் நீர் இல்லாததன் காரணமாக விவசாயமும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாலை நேரங்களில் காட்டு யானைகளின் தொல்லை படுமோசமாக இப்பதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றார்கள் (21)

# மதபள்ளிகளை தொடர்ந்து சோதனையிடுங்கள்

# தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுங்கள்




நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்ற குண்டு வெடிப்பை அடுத்து ஒக்ஸ போட் சுரங்க ரயில் பாதையில் காவலில் நிற்கும் பொலிசார்.

## -பாக் .அதிபர் முஷாரப் உத்தரவு-

(இஸ்லாமபாத்)

**மதப்பள்ளிகளில் தொடர்ந்து சோதனையிடுங்கள். தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுங்கள் என்று அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் உத்தரவிட்டுள்ளார்.**

லண்டன் குண்டு வெடிப்புக்களில் சம்பந்தப்பட்ட மனித வெடிகுண்டு தீவிரவாதிகள் பாகிஸ்தானிலுள்ள மதப் பள்ளிகளில் தங்கியிருந்தது தெரியவந்ததையடுத்து மதப் பள்ளிகளில் கடந்த சில நாட்களாக அதிரடி சோதனை நடத்தப்படுகின்றது. அங்கிருந்த 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கைது செய்யப்படுள்ளனர். அந்தச் சோதனையைத் தொடர்ந்து தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிபர் முஷாரப் உத்தரவிட்டுள்ளார்.


இது குறித்து முஷாரப் கூறியதாக வெளியிடப்பட்ட ஏஜென்சி செய்திகள் கூறியிருப்பதாவது:-

மதப்பள்ளிகளில் தீவிரவாதிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் மற்ற மதங்களின் மீதுள்ள வெறுப் புணர்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். அதே சமயம் எல்லா மதப் பள்ளிகளும் தீவிரவாத நட வடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறேன். மத ரீதியான தீவிரவாதிகள் பாகிஸ்தானின் அமைதியைச் சீரகுலைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மசூதிகளில் ஒலிபெருக்கிகளைத் தவறாகப் பயன்படுத்துவததைக் கட்டுப்படுத்தவும், உத்தரவிட்டுள்ளேன். மற்ற மதத்தவரின் உணர்வு



களைப் பாதிக்கும் வகையில் செயற்படுவோர் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்க உள்துறை அமைச்சர் அப்டாப் ஷெர் போவுக்கு உத்தரவிட்டுள்ளேன் இவ்வாறு முஷாரப் கூறியுள்ளார்.



லண்டன் குண்டு வெடிப்பில் பலியாகியவர்களின் நினைவாக அனுதாபச் செய்தியை வாசித்து மலர்களை வைத்து அஞ்சலி செய்யும் ஆப்கானிஸ்தான் அதிபா ஹமீட் கர்சாய் (இடது).

## லண்டனில் முக்கிய வீதிகள் போக்குவரத்திற்குத் தடை

(லண்டன்)

லண்டன் பாதாள ரயில் பாதையில் குண்டு வெடித்ததையடுத்து லண்டன் நகரில் முக்கிய பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டுள் ளது. பேருந்து மற்றும் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் மக்கள் நடந்து சென்ற வண்ணம் இருந்தனர். பல இடங்களில் ஸ்கொட் லாந்து பொலிசார் சோதனையிட்டு வருகின்றனர். நகர் முழுவதும் பாதுகாப்புப்படையினர் ஆயுதம் ஏந்தியபடி ரோந்து சுற்றி வருகின்றனர்.

## கப்பல்கள் மோதல் ஒருவர் பலி! எட்டுப் பேரைக் காணவில்லை!

(டோக்கியோ)

ஜப்பானிலிருந்து இரும்புக் கழிவுகளை ஏற்றிக் கொண்டு சீனாவுக்குச்சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்று கடலில் பனி மூட்டம் அதிகமாக இருந்ததால் மற்றொரு சரக்குக் கப்பல் மீது மோதியதில் கப்பல் ஊழியர் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர். எட்டுப் பேரைக் காணவில்லை.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை விரிவாக்கம் ஜி-4 நாடுகள் தீர்மானத்தை அமெரிக்கா தெரிவிக்கும்

(வோஷிங்டன்)

ஐ.நா. பாதுகாப்பு சபையில் 15 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த எண்ணிக்கையை 25 அல்லது 26 ஆக உயர்த்தக் கோரி ஜி-4 நாடுகளான இந்தியா, ஜப்பான், பிறேசில், ஜேர்மனி தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளன. இதை எதிர்த்து வாக்களிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.




பாக்தாத்தில் தீவீரவாதிகளை தேடியழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவர்.

# சதாம் ஹுசேன் மீதான விசாரணை ஆரம்பம்

# நீதிபதியின் கேள்விக்கு ஆவேசப்பதில்

சிறைவைக்கப்பட்டுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் மீதான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அவர் தனது ஆட்சியின் போது ஆயிரக்கணக்கான ஷியா பிரிவினரைக் கொன்று குவித்ததாகக் தொடரப்பட்ட வழக்கு விசாரணை தொடங்கியது.இதற்காக சதாம் ஹுசேன் ரகசிய சிறையிலிருந்து பாக்தாத்திலுள்ள நீதிமன்றுக்கு கொண்டுவரப்பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அவரிடம் வாசித்து காட்டப்பட்டது.

நீதிபதி அவரிடம் சில கேள்விகளை கேட்டார்.இதற்கு சதாம்ஹுசேன் ஆவேசத்துடன் பதிலளித்ததாகவும் தனது செயல்களை அவர் நியாயப்படுத்தியதுடன் நீதிபதியிடம் எதிர் கேள்வி கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தாடியுடன் முதுமையுடனும் அவர் காணப்பட்டாலும் சோர்வடைய வில்லை. உரத்த குரலில் எந்தப் பயமும் கவலையும் இன்றி அவர் பேசினார்.




சதாம் ஹுசேன் நீதி மன்றில் ஆஜர்ப்படுத் தப்பட்டதையும் நீதிபதியின் கேள்விகளுக்கு பதில் அளிப்ப தையும் அல் அரேபியா தொலைக்காட்சி ஒளி பரப்பியது.

## சுமத்ரா தீவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவிலுள்ள சுமத்ரா தீவின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை லேசான நில நடுக்கம் ஏற்பட்டது.

சுனாமிப் பேரழிவின் தொடர்ச்சியாக இந்தோனேசியாவில் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. நேற்று முன் தினம் காலை 7.13 மணியளவில் சுமத்ரா தீவின் வடக்கு பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் இது 5.2 எனப் பதிவாகியிருந்தது. சுமத்ரா தீவின் வடக்குப் பகுதியில் 4.5 டிகிரியிலும், கிழக்குப் பகுதியில் 96 டிகிரிலும் நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது. சேத விபரங்கள் குறித்த தகவல் ஏதும் இல்லை.



கெயிட்டியில் அண்மையில் இராணுவத்தினர் நடத்திய பாரிய தேடுதல் வேட்டையின் பின்னர் தங்கள் இருப்பிடம் நோக்கிச் செல்லும் மக்கள் இத் தேடுதல் நடவடிக்கையின் போது ஒன்பது பேர் தாக்குதலில் பலியாகினர்.

## தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு பயந்து விட மாட்டோம் — பிளேயர்

தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு பயந்து விட மாட்டோம் என இங்கிலாந்து பிரதமரும்; அமெரிக்க சனாதிபதியும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.


நேற்று முன்தினம் இங்கிலாந்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக ரொனிபிளேயர் ஜோர்ஜ்புஷ்சிற்கு விளக்கிக் கூறினார். இக்குண்டு வெடிப்பில் உயிர்ப்பலி இல்லாது விட்டாலும் இச்சம்பவம் சிறிய சம்பவம் என நினைத்து' விடாதீர்கள் இந்தச் சம்பவம் மிகவும் ஆபத்தானது என்றார். பிளேயர்.

## ஜேர்மன் வாசியாகிறார் ஜாக்சன் பெர்லின் நகரில் வீடு பார்க்கிறார் தந்தை

"மைக்கேல் ஜாக்சன் ஜேர்மன் நாட்டை மிகவும் நேசிக்கிறார். அவர் பெர்லின் நகரில் குடியேற விரும்பகிறார். ஜேர்மன் வாசியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என அவரின் தந்தை ஜோ ஜாக்சன் தெரிவித்துள்ளார்.

புகழ் பெற்ற பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் (வயது- 46) மீது சிறுவனைப் பாலியல் பலாத்காரம் செய்தாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வழக்கு விசாரணை அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணம் சாண்டா மரியாவில் உள்ள நீதிமன்றில் நடந்தது. இந்த வழக்கிலிருந்து ஜாக்சன் சமீபத்தில் விடுதலையானார். விடுதலை செய்யப்பட்டதும் மன அமைதிக்காக மைக்கேல் ஜாக்சன் அரபு நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

இந் நிலையில் பெர்லின் நகரில் இருந்து வெளி வரும் பைல்டு நாளிதழுக்கு மைக்கேல் ஜாக்சனின் தந்தை ஜோ ஜாக்சன் அளித்த பேட்டியில் கூறியதாவது; மைக்கேல் ஜாக்சன் ஜேர்மனியின் பெர்லின் நகரை மிகவும் நேசிக்கிறார். பெர்லின் நருக்கு மாற விரும்புகிறார். விரைவில் அவர் ஜேர்மன் வாசியாகலாம். இங்கு அவருக்கு வீடு பார்த்து வருகிறேன். என்னுடைய பிறந்த நாளை ஜேர்மன் தலைநகர் பெர்லினில் கொண்டாட விரும்புகிறேன். இதில் என்னுடைய குடும் பஸ்தர் அனைவரும் கலந்து கொள்வார்கள். என் மகன் மைக் கேல் ஜாக்சனும் கலந்துகொள்வார். இந்த விழாவிற்கு மைக் கேலின் ரசிகர்கள் ஆயிரம் பேரை அழைக்க முடிவு செய்துள்ளேன் என்றார்.



கடந்த வாரம் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் தாக்குதலில் காயமுற்று நேற்று மரணமான ஹமாஸ் தீவிரவாதி ஹமீட் அல்டாவின் உடல் இறுதிக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படுவதையும், அவரை நண்பர் ஒருவர் கையடக்கக் கமராவில் புகைப்படம் எடுப்பதையும் காணலாம்.

# த.பு.க அனுசரணையுடன் நிகொட் திட்டத்தின்கீழ்

# 26 பயனாளிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா கடன் வழங்கல்

(முள்ளியவளை)

**தமிழர்புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் நிகொட் திட்டத்தின் கீழ் செம்மலைப்பகுதியில் கடந்தவாரம் 26பயனாளிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டது.**

மேற்படி நிகழ்வானது தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட்திட்ட செம்மலைஅலுவலக ஒன்று, கூடல் மண்டபத்தில் செம்மலை கிராம அபிவிருத்திக்குழுத் தலைவர் நா.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து கடன்திட்டத்தின் நோக்கம், இதனூடாக பயனாளிகள் எவ்வாறான பயனைஅடைய முடியும் போன்ற விடயங்களை உள்ளடக்கி சிறப்பு கருத்துரைகளை முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆலோசகர் பாலசுப்பிரமணியம். நிகொட் திட்ட சமுதாய அபிவிருத்தித்திட்ட உத்தியோகத்தர் சுதர்சன் , செம்மலைப் பகுதி சமாதான நீதவான் இரத்தினம், செம்மலை சமூகபொருளாதார அபிவிருத்தி சங்கத் தலைவர் மா. அபிமன்னகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனையடுத்து விவசாய ஊக்குவிப்புக்காக எட்டுப் பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம்ரூபா வீதமும், மீன்பிடி ஊக்குவிப்புக்காக எட்டுப்பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 20ஆயிரம்ரூபா வீதமும், கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்புக்காக ஆறு பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவீதமும், சிறுவியாபார ஊக்குவிப்புக்காக நான்கு பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் 15ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டதையடுத்து சமூக அபிவிருத்திக் குழு செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசணையுடன் நிகொட்திட்டத்தின் கீழ்அக்கிராமம் அபிவிருத்திசெய்யப்பட்டுவருகின்றது. (ஆ)

# மாவீரர் கானகனின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்

உருத்திரபுரீஸ்வரம் கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் கானகன் முன்பள்ளியில் மாவீரர் கானகனின் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், சிறுவர் விளையாட்டு பயிற்சி ஆரம்ப நிகழ்வும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணியளவில் கானகன் முன்பள்ளி வளாகத்தில் ஆரம்ப மாகி நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிர்வாக தலைவர் இ. பரஞ்சோதி தலைமை தாங்கினார்.

பரஞ்சோதி அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர், உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வின் சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி, சிவநகர் கிராமசேவையாளர் வைத்தீஸ்வரமூர்த்தி கிளி/அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை ஆகியோரும் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறார்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கானகனின் வரலாறு பற்றிய அவரது சகோதரியான சூரியகுமாரி நினைவுரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் மாவீரர் கானகன் நினைவாக தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், கானகன் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்தார்.


# கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை கூட்டமும் சமகாலக்கருத்தரங்கும்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் கலந்துரையாடல் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சமகாலஅரசியல் கருத்தரங்கும் தேசிய எழுச்சிப்பேரவை மீளமைத்தல்தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கருத்துரைகளை முல்லை. மாவட்ட ஊடகப்பேச்சாளர் சி.வேதவனம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் வழங்கினர். (05)



மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதியின் ஒன்பதாம் கட்டைப்பகுதியில் கடந்த 20 ஆம்திகதிமுதல் யானைஒன்று சுகயீனமுற்ற நிலையில் காணப்பட்டது. நேற்றுமுன்தினம்அனுராதபுரத்திலிருந்து கால்நடைவைத்தியர்கள் வரவழைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டபோதும் யானை இறந்துவிட்டது. (படம்:-கவியரசன்)

# கால்நடை வைத்தியரை நியமிக்க கோரிக்கை

வடமராட்சி கிழக்கில் கால்நடை வைத்தியர் இன்மையால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப் படுகிறது.

தமது கால் நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வெளியிடங்களிலிருந்தே வைத்தியர்களை அழைத்து வரவேண்டியுள்ளதாகவும் இதனால்பெரும் பண, நேரவிரயங்கள் ஏற்படுவதுடன் வைத்திய வசதியின்மையால் கால்நடைகளை இழக்க வேண்டியுள்ளதாகவும் இம்மக்கள் கவலையடைகின்றனர். இங்குள்ள பெருமளவான மக்கள் பெருமளவு கால் நடைகளை வளர்க்கின்றமையைக் கருத்திற்கொண்டு வாரத்தில் ஒரு முறையாவது ஒரு கால்நடைவைத்தியரை தமது பகுதிக்கு சேவை செய்ய நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (11)

# கூட்டம்

(இரணைமடு)

இரணைமடு திட்டஉபகுழு புனரமைப்பு கூட்டம் இன்று பன்னங்கண்டி பாடசாலையில் நடைபெற விருப்பதாக இரணைமடு, அக்கராயன் வதிவிட திட்ட முகாமை யாளர் பொன்நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

புனரமைப்புக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து தமக்கான செயற்றிட்டத்திற்கான நிர்வாகிகளைத் தெரிவு செய்யுமாறும் திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். (46)

# கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

(வடமராட்சி கிழக்கு)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரும், பளை பொதுச்சுகாதாரப் பிரிவினரும் இணைந்து பளை நகரிலும் ஏனைய பகுதிகளிலும் கட்டாக்காலியாகத் திரிந்த நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கையில் கட்டாக்காலியா கத்திரிந்த 40 நாய்களைப் பிடித்து நஞ்சு ஊசி ஏற்றி அழித்துள்ளனர். இந் நடவடிக்கையினால் கட்டாக்காலி நாய்களின் தொல்லை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (11)

# பேருந்துத்தரிப்பிடம் இன்மையால் சிரமம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப்பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் பேருந்துகள் பயணிக்கும் பிரதான வீதிகளில் பேருந்து தரிப்பிடம் இன்மையால் பயணிகள் சிரமத்திற்குள்ளாகிவருகின்றனர்.

மேற்படி பகுதியில் பேருந்து தரிப்பிடங்கள் இன்மையால் பயணிகள் ஆங்காங்கு நின்று பேருந்துகளில் ஏறிக்கொள்ளவேண்டியுள்ளது.இந்நிலையில் சிலபேருந்துகள அவ்விடங்களில் நிறுத்தாது செல்வதால் பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாவதையும் அவதானிக்கமுடிகின்றது.

இதேவேளை இப்பிரதேசத்தின் பிரதான வீதியில் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள இரண்டு பேருந்து தரிப்பிடங்களிலும் சிலபேருந்துகள் நிறுத்தப்படுவதில்லை என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

# நெடுங்கேணி சுற்றயல்கூறு வைத்தியசாலை நிர்மாண வேலைகளை துரிதப்படுத்தக் கோரிக்கை

(முள்ளியவளை)

நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இன்றி நோயாளர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையின் இட நெருக்கடியுடன் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் சிகிச்சைக்காக பெயர்பதிவு செய்யும் இடத்தில் மழைநீர் ஒழுக்காகவுள்ளதால் நோயாளர்கள் முதல் வைத்தியசாலை ஊழியர்கள் வரை அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி வைத்தியசாலை சிறு கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றது. புதிய கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் வேலைகள் ஆமை வேகத்திலேயே இடம் பெற்று வருகின்றது.

மேற்படி கட்டட வேலைகளை துரிதப்படுத்தி புதிய கட்டடத் தொகுதியில் வைத்தியசாலையை இயக்கி நோயாளரின் அவலம் தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.(ஆ)

# புது.ம.கல்லூரியின் பொன்விழாவும் கலாச்சார மண்டபம் திறந்துவைப்பும்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழா எதிர்வரும் 10ஆம் திகதி அன்று மிகவும் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன.

இவ் விழாவை சிறப்பிக்கும் முகமாக லண்டனிலுள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஒருகோடி ரூபா செலவில் கலாச்சார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுஅதன் இறுதி வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இக்கலாச்சார மண்டமும் அண்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளது. பொன்விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

இப்பொன்விழாவானது இரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது. இவ் விழாவிற்கு லண்டனிலிருந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் வருகை தரவுள்ளனர். (08)

# ஜெபிக் நிறுவன நிதியுதவியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திருத்தம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் போரினால் சேதமடைந்துள்ள வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிணறுகள் என்பன "ஜெபிக்" நிறுவனத்தின் நிதி யுதவியில் திருத்தப்பட உள்ளதென முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் யூனிசெப் நிறுவனத்தால் பிராந்திய மருந்துக்களஞ்சியம் அமைக்கப்படவுள்ளதெனவும்முல்லை மாவட்டத்தில் மருந்துகளை பாதுகாத்து வைப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை இதன்மூலம் தீர்க்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



பூநகரி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நினைவழியா நினைவுகள் சிறுகதை தொகுதி வெளியிட்டுவிழாவில் பூநகரி கடற்புலிஅரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதன் தேசியக் கொடி ஏற்றுவதை படத்தில்காணலாம்.

# தண்ணீர்த்தாங்கி திறந்துவைப்பு

மு/பாரதி வித்தியாலய முன்னாள் அதிபரும், முல்லை.கல்வி வலய உதவிப்பணிப்பாளருமான அமரர் சி.ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக மு/பாரதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி திறப்புவிழாவும் குடிநீர் விநியோகமும் கடந்த 15ஆம் திகதி அன்று நடைபெற்றது.

பிரதி அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை புதுக்குடியிருப்புக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜீ.எஸ் பரமேஸ்வரனும், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தலைவர் சி.இராசேந்திரமும் ஏற்றிவைக்க, தண்ணீர்த்தாங்கியின் பெயர்ப்பலகையை முல்லை.கல்வி வலய கணக்காளர் ஜெகராஜா திரை நீக்கம் செய்துவைக்க, மாணவர்களுக்கான நீர்விநியோகத்தை அமரர் ஆறுமுகம் அவர்களின் துணை வியார் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள், பழையமாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# முல்லை. புத்தி ஜீவிகளுடனான சிறப்புக்கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

சமகால அரசியல்நிலவரம் தொடர்பாக முல்லைமாவட்ட புத்திஜீவிகளுடனான சிறப்புக்கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையில் மாவட்ட உப செயலாளர் செல்வநாயகம் தலைமையில் ஆரம்பமானது.

இதில் அவசியங்களும், அங்கலாய்ப்புக்களும் என்ற தலைப்பில் தலைமையுரை இடம் பெற்றது.

தொடர்ந்து கருத்துக்களை முல்லை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் அருணாசலம், முள்ளியவளை தேசிய எழுச்சிபேரவைசார்பாக ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்த, சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் மாவட்ட புத்திஜீவிகள் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்விசார் சமூகம், பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாவட்ட கோட்ட ஊரக அமைப்புப்பிரதிநிதிகள், செய்தியாளர்கள். எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# திருநெல்வேலியில் 22 வருடங்களுக்கு முன் நடந்த வரலாற்றுத் தாக்குதல்

**1983ஆம்** ஆண்டு யூலை 23 ஆம் திகதி இரவு 11 மணியளவில், திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து; யாழ்ப்பாணம் நோக்கி ஒரு வெள்ளை நிற 'டெலிக்கா வான்' வந்துகொண்டிருக்கிறது. 'வானை' செல்லக்கிளி செலுத்த, அவனை அடுத்து கையில் எஸ். எம். ஜியுடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறான் விக்ரர். அவனை அடுத்து நான். 'வானி'ன் பின் பகுதியில் தம்பி (தலைவர்) மற்றும் ஏனைய தோழர்கள்.

நாம் முன்பு திட்டமிட்டபடி 'வான்' தபால் பெட்டிச் சந்தியில் நிற்க, எல்லோரும் கீழே இறங்குகிறோம்.

அங்குதான் கண்ணிவெடி புதைக்க வேண்டும்.

'வான்'அந்த இடத்தில் நின்று நாங்கள் இறங்க, அயற்சனங்கள் அரவம்கேட்டு வெளிவரத் தொடங்க, விக்ரரும் செல்லக்கிளியும் (இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்) சிங்களத்தில் உரக்கக் கதைத்தபடி றோட்டிலே நடக்கத் தொடங்க, வெளியே எட்டிப் பார்த்த தலைகளைக் காணவில்லை. வெளிச்சம் போட்ட இரு வீடுகளின் விளக்குகளும் அணைந்து விட்டன, யாரும் வெளிவரவில்லை. இராணுவத்தினர் வந்து நிற்கின்றனர் என்று நினைத்துவிட்டனர்.

முன்பு திட்டமிட்டபடி அப்பையா அண்ணை, விக்ரர், செல்லக்கிளி மூவரும் வெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர். விக்ரரும், செல்லக்கிளியும் பிக்கானால் றோட்டிலே கிடங்கு வெட்டுகின்றனர். கண்ணிவெடி புதைப்பது பெரிய வேலை.

வெடிமருந்து தயார்படுத்துகையில் வெடி மருந்தின் நச்சுத் தன்மையால் தலையிடிக்கும். என்னுடைய அனுபவப்படி தாங்க முடியாத தலையிடி. அதன்பின் கிடங்கு வெட்டி (இறுகப் போடப்பட்ட தார் றோட்டிலே கிடங்கு வெட்டுவது அவ்வளவு இலகுவானதல்ல), இவற்றையும்விட தாக்குதலின்போது சண்டையும் போடவேண்டும்.

எமது தகவலின்படி சுமார் நள்ளிரவு 12 மணியளவில், பலாலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு 'ட்ரக்' வாகனத்திலும் இராணுவத்தினர் வருவது வழக்கம். ஜீப்பில் நான்கு இராணுவத்தினரும் 'ட்ரக்'கில் பத்துப் பேர் அளவிலும் வருவார்கள் எனத் தகவல். எனவே, யாழ். பல்கலைக்கழக பின்வீதி பலாலி றோட்டைச் சந்திக்கும் இடமாகிய தபால்பெட்டிச் சந்தியில் கண்ணிவெடி புதைத்து, இரண்டாவதாக வரும் வாகனத்துக்குக் கண்ணிவெடியால் தாக்க, முன்னால்வரும் வாகனத்தை சுட்டு மடக்குவது என்பது நாம் வகுத்த திட்டம். அதன்படி திருநெல்வேலிச் சந்தியில் ஒரு 'வோக்கி ரோக்கி' - அது அவர்களுடைய வரவை எமக்கு அறிவிக்கும்.

விக்ரரும், செல்லக்கிளியும், அப்பையா அண்ணையும் கண்ணிவெடி தயார்படுத்திக் கொண்டிருக்கையில், மற்ற எல்லோரும் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களின் உள்ளே பாய்ந்து, தத்தமக்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினோம். ஒவ்வொருவருக்கும் இடம் கிடைத்தது. கண்ணிவெடியைப் புதைத்துக் கொண்டிருக்கையில் விக்ரர் விலகி, தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தின் சுவரின் உள்ளே பாய்கிறான். சுவர் அவனைவிட உயரமாக இருக்க, பின்பு வெளியில் குதித்து உயரம் வைப்பதற்காகத் தெருவில் தேடி சில பெரிய கற்களை எடுத்து உள்ளே போட்டு தன் உயரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு, அந்தச் சுவரின் மறைவைக் கொண்டு தன் நிலையைச் சீர்படுத்திக் கொள்கிறான். துப்பாக்கியைத் தோளில் வைத்து இயக்கிப்பார்க்கும் விதங்களையும், துப்பாக்கியை இலகுவாக இயக்க முடியுமா என்பதையும் சரிபார்த்துக் கொள்கிறான்.

தம்பி தபால்பெட்டிச் சந்தியில் இருந்து திருநெல்வேலிப்பக்கமாக உள்ள ஒரு வீட்டின் சுவரின் பின்னே நிலையை எடுத்துத் தாக்குதலுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில், 'வோக்கி' செல்லக்கிளியைக் கூப்பிடுகின்றது.

செல்லக்கிளி அம்மான் மிக அவசரமாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு, மீதி வேலையை அப்பையா அண்ணையிடம் விட்டுவிட்டு, தனது நிலைக்குச் செல்லுகின்றான். அம்மான் அருகில் உள்ள ஒரு கடையின் மேல் வெடிக்கவைக்கும் கருவியுடனும், தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடனும் தயாராகின்றான்.

வெளிச்சம் எமக்கும் தெரிந்தது; அப்போது கூட வேலை முடியவில்லை. விக்ரர், "அப்பையா அண்ணை வெளிச்சம் வருகின்றது கெதியா மாறுங்கோ'' என்று கத்த, அப்பையா அண்ணை வயர் ரோல்களுக்கு ரேப் சுத்திக்கொண்டிருக்கையில், 'வோக்கி' மீண்டும் அலறியது.

"அம்மான் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்தான், முன்னுக்கு ஜீப் பின்னால் ட்ரக்'' என்று அறிவித்தது. எனவே அம்மான் 'ட்ரக்' வண்டிக்கு கண்ணிவெடியால் தாக்க, முன்னால் வரும் ஜீப்புக்கு நாம் தாக்குதல் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில், வெளிச்சங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஜீப்பை எம்மிடம் வரவிட்டுவிட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டியை கண்ணிவெடியால் தாக்கி, அதில் தப்புபவர்களைச் சுடுவதாக எமது திட்டம். 'ட்ரக்' வண்டியில் பின்பக்கமாக இருப்பவர்களைச் சுடக் கூடியவாறு விக்ரர் நிற்கின்றான். விக்ரரையும் தாண்டுபவர்களைக் கவனிக்க, தம்பியும் சில தோழர்களும் நிற்கின்றனர்.வெளிச்சங்கள் திருநெல்வேலிச் சந்தியைக் கடந்து வந்துகொண்டிருந்தன. நான் எட்டிப் பார்த்தேன். முன்னால் இரு விளக்குகளுடன் ஒரு வாகனம். அந்த விளக்குகளுக்கிடையிலான இடைவெளியைக்கொண்டு அது ஜீப் என்று புரிந்து கொண்டேன். அடுத்து 'ட்ரக்'. மெல்ல வந்து கொண்டிருக்கின்றன.

நாம் ஜீப்பைத் தாக்குவதற்குத் தயாராகிக்கொண்டு இருக்க, ஜீப் விக்ரர் நின்ற இடத்தைத் தாண்டி கண்ணிவெடி வைத்த இடத்தை அண்மித்தபோது, கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டு விடுகிறது. எமக்கு அதிர்ச்சி. ஏன் அப்படி நடந்தது? சிந்திக்க நேரமில்லை. உண்மையில் ஜீப் வண்டியை விட்டு, பின்னால் வரும் 'ட்ரக்' வண்டிக்கே கண்ணிவெடி வைக்க இருந்தோம். இன்றுவரை அது ஏன் ஜீப்புக்கு வெடிக்கவைக்கப்பட்டது என்பது தெரியாது. ஏனென்றால் அதை வெடிக்க வைத்த செல்லக்கிளி அதை விளக்க வில்லை; சண்டை முடிந்தபோது அவனை நாம் இழந்துவிட்டோம்.

சிந்திக்க நேரமில்லை, உடனே நானும் என்னோடு நின்றவர்களும் சுடத் தொடங்கினோம். ஜீப்பின் வெளிச்சம் அணையவில்லை, எனவே பின்னால் நடப்பவை எமக்குத் தெரியவில்லை.என்னுடைய ஜி 3 யால் இரு விளக்குகளையும் குறிபார்த்து உடைத்தேன். ஜீப்பின் விளக்கு உடைந்ததும், பின்னால் நின்ற 'ட்ரக்' கின் வெளிச்சத்தில் ஜீப்பில் இருந்து சில உருவங்கள் இறங்குவதைக் கண்டு, அவற்றை நோக்கியும் ஜீப்பை நோக்கியும் ரவைக் கூட்டில் போடப்பட்டிருந்த அத்தனை குண்டுகளையும் சுட்டேன். அது இப்படி இருக்க விக்ரரைப் பார்ப்போம்.

ஜீப் வண்டி அவனைத் தாண்டும் போது விக்ரர் தன் தலையைச் சுவருக்கு உள்ளே இழுத்துக்கொண்டு நிற்கையில், மிகப்பெரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடிக்கிறது. விக்ரர் தலையை நிமிர்த்திப் பார்க்க ஒரே புழுதிமண்டலம். மங்கலாக ஒருவன் வெடித்த ஜீப்பில் இருந்து ஓடி வருவது தெரிய, அவனைக் குறிவைத்து விசையை அழுத்த, சில குண்டுகள் ஓடி வந்தவனின் உடலிலே பாய அவன் தூக்கி எறியப்படுகின்றான்; அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான், இன்னுமொருவன் ஓடிவர அவனை நோக்கிச் சுட, அவன் மீண்டும் ஓடிவர மீண்டும் சுட, குண்டுகள் அவனை விழுத்தவில்லை, ஆனால் காயப்படுத்தின. ஆனாலும் அவன் காயத்துடன் பல்கலைக்கழக பின் வீதியால் ஓடினான். விக்ரர் அவனைத் திரும்பச் சுட்டான். வானளாவ உயர்ந்த புழுதி மண்டலம் அடங்கவில்லை; மற்றும் தகுந்த வெளிச்சம் இல்லை. எனவேதான் சரியாகச் சுடமுடியவில்லை. அவன் ஓடிவிட, ஜீப்புக்கு கிட்டே ஒன்றோ இரண்டோ துப்பாக்கிகள் விக்ரரை நோக்கிச் சுட்டன. அதன் சுவாலையை விக்ரர் கண்டான். தன் இயந்திரத் துப்பாக்கியால் அந்தச் சுவாலையை மையமாக வைத்துச் சில வேட்டுக்களைத் தீர்த்தான். பின்பு அது அடங்கிவிட்டது. மேலும் ஒரு சில உருவங்கள் தெரிய அவற்றை நோக்கியும் சில குண்டுகளைச் சுட்டான். துப்பாக்கி திடீரென்று நின்றுவிட்டது. விக்ரருக்கு விளங்கியது. போடப்பட்ட குண்டுகள் முடிந்துவிட்டது; குண்டுகள் நிரப்பப்பட்ட மறு ரவைச் சட்டத்தை மாற்றி மீண்டும் சுட்டான். அதே வேளை பின்னால் வந்த 'ட்ரக்' வண்டியின் சாரதி வெடி வெடித்ததைப் பார்த்தான். பெரிய வெளிச்சத்தையும் ஜீப் மேலே தூக்கி எறியப்பட்டதையும் கண்ட சாரதி தன்னை அறியாமலே 'பிரேக்கை' இறுக அழுத்தினான். ஏன், பிரேக் அழுத்தும் மிதிமீது ஏறிநின்றான் என்றே கூறலாம்.

'ட்ரக்' பிரேக் போட்டு நின்றதும் 'ட்ரக்'கின் பின்புறத்தில், இராணுவத்தினர் தம்துப்பாக்கியைத் தயாராக்கியவாறு இருக்கையிலிருந்து எழத்தொடங்கினர்.

தம்பி இரு வாகனங்களும் தன்னைத் தாண்டுமட்டும் சுவரின் மறைவிலே குந்தி இருக்க, இரு வாகனங்களும் அவரைத் தாண்டுகின்றன. சிறிதாக நிமிர்ந்து பார்க்கையில் ஜீப் வண்டி கண்ணிவெடியை நெருங்கிக் கொண்டிருக்க, 'ட்ரக்' அவருக்கு சரியாக 20 யார் தூரத்தில் சென்றுகொண்டு இருக்கக் கண்ணிவெடி வெடித்தது. 'ட்ரக்' அவருக்கு மிகக்கிட்ட - கையில் எட்டிப்பிடிக்குமாப்போல் தூரத்தில் - பிரேக் போட்டதால் குலுங்கி நிற்க, எப்போதும் உடன் வைத்திருக்கும் அவருடைய ஜி 3 ஏ 3 வெடிக்கத் தொடங்கியது.

'ட்ரக்' கின் இருக்கையிலிருந்து இராணுவத்தினர் எழுந்தும் எழாததுமான நிலையில், தம்பியின் ஜி 3 வெடிக்கத் தொடங்கியது.

ஜி 3 ஏ 3 யிலிருந்து புறப்பட்ட சூடான ரவைகள், தாக்குதலுக்குத் தயாராக எழுந்த இராணுவத்தினரை வரிசையாக விழுத்தத் தொடங்கின.

சற்றும் எதிர்பாராமல் ஏற்பட்ட இத்திருப்பம், தம்பியை ஆபத்தின் உச்ச எல்லைக்குள் சிக்க வைத்துவிட்டது.

ஆனால் இந்த எதிர்பாராத திருப்பமே இப்போரின் முழு வெற்றிக்கு வழி அமைத்தது எனலாம். மிகத் துரிதமாகவும் குறிதவறாமலும் துப்பாக்கியை கையாள்வதில் முதன்மையாளராகத் திகழும் தம்பியிடம், 'ட்ரக்' கில் வந்த ஒன்பது இராணுவத்தினரும் சிக்கியதே எமது முழு வெற்றிக்கு வழி கோலியது.

'ட்ரக்' மிகக் கிட்ட நிற்பதால் இலகுவாக தம்பியால் அவர்களைச் சுட முடிகிறது. வெடியின் அதிர்வில் தெருவிளக்குகள் அணைந்துவிட்ட போதிலும், மிகக் கிட்டேயிருப்பதால் ஒவ்வொருவராகக் குறிவைத்துச் சுட்டார். ஆனால் மிக அபாயகரமான நிலை அவருக்கு; இராணுவத்தினரைப் பொறுத்தவரை தம்பி மிகக் கிட்டே நிற்கிறார். எதிர்பாராமல் இத்தாக்குதலில் மிக அபாயத்தின் எல்லையில் தம்பிதான் நிற்கிறார். ஆனால் தனது ஆளுமையால் - ஆற்றலால் - வரிசையாக இராணுவத்தினரை விழுத்தி வந்தபோதிலும், இரண்டு சாதுரியமான இராணுவத்தினர் 'ட்ரக்' கிலிருந்து கீழே குதித்து சில்லுக்குள் புகுந்து கொண்டு மறைந்திருந்து தமது தாக்குதலை ஆரம்பித்தார்கள். தம்பி நின்ற சுவரில் வேட்டுக்கள் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. இத்துடன் 'ட்ரக்' கின் முன்புறத்திலிருந்தவர்களும் கீழே பாய எத்தனித்தனர். இதை நோக்கிய தம்பியின் ஜி 3 இவர்களையும் நோக்கி முழங்குகிறது.

இதிலே மிகவும் சங்கடம் என்னவென்றால், தம்பிக்கு உதவிக்கு எவருமேயில்லை. நாம் எமது திட்டத்தின்படி ஜீப்பை முன்னே விட்டு ட்ரக் வண்டிக்கு கண்ணிவெடித் தாக்குதல் செய்வதாக இருந்தோம். அத்திட்டத்தின்படி தம்பியை மிகப் பின்னுக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போது தனியாகவே ட்ரக்கை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தம்பி தள்ளப்பட்டுவிட்டார். இதேநேரம் ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த விக்ரர், தனக்கு 20 யார் பின்னே 'ட்ரக்' நிற்பதையும் அதிலிருந்து துப்பாக்கிகள் சடசடப்பதையும் அவதானித்தான். தன்இயந்திரத் துப்பாக்கியை 'ட்ரக்கை' நோக்கித் திருப்பினான் - 'ட்ரக்'கின் முன் கண்ணாடிகள் சிதறுகின்றன. கண்ணாடிக்கு குறுக்காக ஓர் நீள வரிசையாகச் சுட்டான்.

அப்போதுதான் சாரதி இறந்திருக்க வேண்டும். நாம் பின்பு பார்த்தபோது சாரதி தனது இருக்கையிலேயே ஸ்ரேறிங்கில் சாய்ந்து, வாயால் இரத்தம் கக்கியபடி உயிரை விட்டிருந்தான்.

விக்ரரின் இடத்திலிருந்து சற்று முன் நோக்கி எதிரில் இருந்த ஒழுங்கையிலிருந்து, "பஸீர் காக்கா'' 'றிப்பீட்டரால்' ஜீப்பை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். 'றிப்பீட்டரில்' தோட்டாக்கள் முடியும்போது, அதை மாற்றித் திருப்பித் தாக்கும்படி சொல்லி உற்சாகமூட்டிக்கொண்டிருந்தார் காக்காவின் அருகிலிருந்த அப்பையாண்ணை. அப்போது ஒழுங்கையை நோக்கி ஒருவன் எஸ். எம். ஜியுடன் ஓடி வந்தான். "சுடு'' என்ற அப்பையாண்ணை உடனே, "கவனம், எங்கட பெடியளோ தெரியாது, பார்த்துச் சுடு'' என்றார். 'றிப்பீட்டர்' சத்தம் ஓய, வந்தவன் பிணமாகச் சரிந்தான். அவனது எஸ். எம். ஜியை அப்பையாண்ணை ஓடிவந்து எடுத்துக்கொண்டார். இவனே ரோந்துப் பிரிவுக்கு தலைமை தாங்கிய லெப்ரினன் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டோம். அவனது விசேட இராணுவ பட்டிகள் அதை உறுதிப்படுத்தின.

இதேநேரம் தம்பி தனியே நிற்பதை உணர்ந்து, ரஞ்சனையும் இன்னொரு போராளியையும் "தம்பியிடம் ஓடு'' என்று துரத்தினேன். அவர்கள் அருகிலுள்ள வீடுகளால் பாய்ந்து தம்பியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ரஞ்சனும், சக போராளியும் தம்பியைச் சென்றடைந்தபோது, 'ட்ரக்'கிலிருந்த அனைத்து துப்பாக்கிகளையும், தம்பியின் தனி ஒரு ஜி 3 ஓயவைத்துவிட்டது.

சாதாரணமாக எவரும் நம்புதற்கரிய இவ் வீரச்செயலை முடித்துவிட்டு அமைதியாக, வீட்டின் அருகேயுள்ள மாமரத்தின் கீழிருந்து, முடிந்த ரவைக் கூட்டிற்கு ரவைகளை நிரப்பிக் கொண்டிருந்தார் தம்பி.

**கேணல் கிட்டு**

மதிலேறிக் குதித்த ரஞ்சனும், மற்றைய போராளியும் ஆயுதத்தோடு ஒரு நபர் இருப்பதைக்கண்டு, ஆயுதத்தைத் தயார் நிலைக்குக் கொண்டுவந்து, ''யாரது'' என்றவாறு முன்னே வந்தனர்.

"அது நான்ராப்பா'' என்றவாறு ரஞ்சனை அடையாளம் கண்ட தம்பி, "இங்கே எல்லாம் முடிந்தது, உங்கடைபக்கம் எப்படி?'' என்றார். "அண்ணை எங்கடை பக்கம் பிரச்சனையில்லை'' என்றார் ரஞ்சன்.

"இங்கையும் எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் எனக்குச் சற்று முன்பாக எதிரேயிருந்த புலேந்திரனையும் சந்தோசத்தையும் காணவில்லை. காயப்பட்டிட்டாங்களோ தெரியவில்லை. வா பார்ப்போம்'' என்றவாறு, தன் பிரியத்திற்குரிய ஜி 3 யைத் தூக்கிக் கொண்டு விரைந்தார் தம்பி.

மதிலேறிக் குதிப்பதற்கு முன், ரஞ்சனுடன் வந்த போராளி தம்பியின் அனுமதியைப் பெற்று, எதற்கும் முன்னெச்சரிக்கையாக ஓர் குண்டை வீசினான். குண்டு 'ட்ரக்' கின் கீழ் விழுந்து வெடித்து, எரிபொருள் தாங்கியை உடைத்தது.

இதன்பின் மதிலேறிக் குதித்து றோட்டைத் தாண்டி, புலேந்திரன் சந்தோசத்தின் இடத்தையடைந்தான், அங்கு புலேந்திரன், சந்தோசத்தைக் காணவில்லை. "எதற்கும் முதலில் இறந்தவர்களின் ஆயுதங்களைச் சேகரியுங்கள்'' எனக் கட்டளையிட்டார் தம்பி. மதிலேறி றோட்டில் குதிக்க ஆயத்தமான ரஞ்சனுடன் வந்த மற்ற வீரன் தம்பியைப் பார்த்து, "அண்ணை அவன் அனுங்குகிறான்.'' மீண்டும் ஒருமுறை முழங்கிய ஜி 3 அவனின் அனுங்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதன்பின் 'ட்ரக்கை' நெருங்கி ஆயுதங்களைச் சேகரிக்கத் தொடங்கினர்.

இதேநேரம், பல்கலைக்கழக பின் வீதியால் ஓடிய ஓர் இராணுவ வீரனை இன்னோர் போராளி துரத்திச் சென்று சுட்டான். ஜீப்பை முற்றாக முடித்துவிட்டு, பொன்னம்மானும் நானும் என்னுடைய போராளிகளும் 'ட்ரக்'கை நோக்கி நடு றோட்டால் ஓடினோம்.

"கரையால் வாருங்கள்'' என்ற தம்பியின்

(11ஆம் பக்கம் பார்க்க)



லெப்.செல்லக்கிளி

# ஒலிம்பிக்

பண்டைய கிரேக்கத்தின் பெலோ பொன்னிஸ்ஸிலிருந்து 20 மைல் மேற்காக அல்பியஸ் நதியின் வடகரையில் புனித நகரமான ஒலிம்பியா அமைந்துள்ளது. இங்குதான் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இடம் பெறுகின்றன. ஒலிம்பிக் விளையாட்டு விழா நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. இடைப்பட்ட இந்த நான்கு வருடகாலம் "ஒலிம்பியாட்" எனப்படும் பண்டைய கிரேக்கர்களினால் கொண்டாடப்பட்டு வந்த இப்பெருவிழாவில் தடகள, குத்துச்சண்டை, மல்யுத்தம், தேரோட்டம், குதிரையேற்றம், போன்ற பண்டைய வீரதீர விளையாட்டுக்கள் ஆரம்பத்தில் இடம் பெற்றிருந்தன.

கி.மு 776ஆம் ஆண்டில் முதலாவது விழா ஒலிம்பியாவில் இடம் பெற்றது. எனினும் சர்வதேச விளையாட்டுக்கள் 1986 இல் ஏதென்சில் நடைபெற்ற போட்டிகளில் இருந்து மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. கல்வியுடன் விளையாட்டுக்களும் ஒன்றாக இணைவதால் முழு உலகயும் ஒரே சமயத்தில் ஒருங்கிணைக்கும் காலம் என்ற எண்ணத்தை முதலில் 1986 இல் நடைமுறைப்படுத்தியவர் பிரான்சின் கல்விச் சிந்தனையாளர், பாரோன் பியரே டீ கூப்பர்டின் என்றால் அது மிகையாகாது.

ஐ.ஓ.சி எனப்படும் சர்வதேச ஒலிம்பிக் குழு, ஒலிம்பிக் போட்டிகள் நடாத்தப்படும் இடங்களைத் தீர் மானிக்கும். மெய்வல்லுநர் போட்டிகள், ஜிம்னாஸ்டிக் சாகச விளையாட்டுக்கள், நீச்சல் போட்டிகள், குதிரையேற்றம் சம்பந்தமான விளையாட்டுக்கள், பல்கோணக் கலப்பு விளையாட்டுக்கள் என்பன பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட விளையாட்டுக்களில் அடங்கும்.

விளையாட்டுக்களின் இயல்பிற்கேற்ப குளிர்கால விளையாட்டுக்கள் ,கோடைகால விளையாட்டுக்களென இருவேறு இடங்களில் நடாத்தப்படும். பனிச்சறுக்கல் Skating,Skiing, Lcehockey என்பன சில பனிக்கால விளையாட்டுக்களாகும்.

முதலாவது ஒலிம்பிக் விழாவில் ஓரே ஒரு போட்டி மாத்திரம் கி.மு 776 இல் இடம் பெற்றுள்ளது. ஒலிம்பியா நகரின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள அல்பியஸ் (தற்போது ரூபியா என அழைக்கப்படும்) நதி ஓரத்தில் முதலாவது ஓட்டப்போட்டி, 200 யார் தூரத்திற்கு இடம் பெற்றது. ஓரேஒரு நிகழ்ச்சியுடன் ஆரம்பித்த இப்போட்டி தற்போது ஆண், பெண் போட்டியாளர்களுக்கான நூற்றுக் கணக்கான விளையாட்டுக்களை உள்ளடக்கி பாரியளவில் வியாபித்துள்ளது.

89 உறுப்பினர்களைக் கொண்ட சர்வதேச ஒலிம்பிக் குழு 1979 இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டவரான ஜுவான் அன்டோனியோ சமராக் என்பவர்தான் ஐ.ஓ.சி இன் முதலாவது தலைவராவார். இதன் தலைமைக்காரியாலயம் சுவிற்சர்லாந்தில் லொசானா நகரத்திலுள்ளது.

ஓலிம்பிக்கின் தாரக மந்திரம்: வேகம் , உயர்வு பலம்: ஆகும். ஐந்துகண்டங் களையும் காட்டுவதாக ஐந்து வர்ணங்களில் ஐந்து வளையங்களை ஒன்றோடு ஒன்று இணைத்து ஒலிம்பிக் சின்னம் உருவாக்கப் பட்டுள்ளது நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய வர்ணங் களினாலான வளையங்களுடன் வெள்ளை நிறப் பின்னணியில் கொடி வடிவமைக் கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் தேசியக் கொடியில் காணப்படும் நிறங்களுள் ஏதேனும் ஒன்று மேற்படி நிறங்களில் பொருந்தக கூடியதாக இச்சின்னம்வடிவமைக் கப்பட்டுள்ளது. வயது ,பால், இனம்,நிறம், நாடு, சாதி போன்ற எல்லா வேற்றுமைகளையும் கடந்து இந்த் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டிலும் இவ் விழா ஒலிம்பியா நகரத்திலேயே சிறப்பாக இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை ஒரு விசேட அம்சமாகும்.

போட்டியாளர் பங்குபற்றும் நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழுக்கள், சர்வதேச விளையாட்டு அமைப்புக்கள், விழாநடைபெறும் நாட்டின் அமைப்புக்குழுக்கள் ஆகியவற்றிற்கு மேலாக சர்வதேச ஒலிம்பிக் குழு என்பன கூட்டாக இவ் வருட விழாவிற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளைப்பற்றிய சுவையான கதைகளும் போட்டி நிகழச்சிகள் பற்றிய வரலாறுகளும் கடந்த போட்டிகளில் நடந்த வியத்தகு சம்பவங்களும் ஏராளமுண்டு

# புற்று நோய் ஏற்படுவது எப்படி?

எமது உடலமைப்பில் கலம் (cell) என்பது உடலை உருவாக்கும்அடிப்படைப்பொருளாகும். கட்டடத்திற்கு கொங்கிறீற் கல் கொடுக்கும் அமைப்புப்போல, பல கலங்கள் கலந்திடைப்பாய் பொருளாய் இணைக்கப்பட்டு இளையங்களை உருவாக்கும். இவ்விளையங்களின் சேர்க்கையால் அங்கங்கள் உருவாகின்றன.உடற்கலங்கள் சில குழந்தைகளிலிருந்து சாதாரண மனித உரு எடையைப்பெற நாளாந்தம் கலப் பெருக்கமடைகின்றன. சில வகைக்கலங்களின் வாழ்நாள் குறுகியதாகவும், சில நீடித்ததாகவும் தேவைக்கேற்ப அமைக்கப்படுகின்றன. அழிக்கப்படும் கலங்கள் மீளவும் உற்பத்தி செய்யப்பட்டு எவ்வித பாதிப்பும் ஏற்படாதது போன்ற நிலைமை அடைகிறது. இத்தகைய செயற்பாட்டிற்கு உயிரினவியல் சேர்க்கையெறிகை தொழிற்பாடுகள் காரணமாகும். கலங்கள் சில சமயங்களில் வளர்ச்சியில் ஒருவித கட்டுப்பாடு அற்று, தேவைக்கு அதிகமாக வளருவதையும் அப்படி வளரும் போது தாய்க்கலத்தின் தன்மையிலிருந்து மாறுபட்டு. தமது கரு, கருவின் கரு என்பன முன்னுக்குப் பின் முரண்பட்டு உருமாற்றமடைந்து காணப்படுவதுவே புற்றுநோயாகும். கலங்களின் உருவ மாற்றத்தோடு அவை தொழிற்படும் தன்மை. உயிரினவியல் நடைமுறைகள் என்பனவற்றில் மாற்றம் காணப்படும். இந்தக்கலங்கள் மாறுபாடடையும் தன்மையினால் இழையங்கள் ஒன்றுபட்டிருப்பதைக்காட்டிலும். பிரிவடைந்து இரத்தோட்ட மூலமாகவும், நிணநீர் மூலமாகவும் உடம்பின் வேறு இடங்களுக்குப் பரவக்கூடும். அல்லது அயலிலுள்ள இழையங்களை ஊடுருவி நோய் நிலையை உருவாக்கும்.

புற்றுநோயை தடுக்கும் முறைகள், வாய் பல் சுகாதாரம் பேணுதல்:-


வாய்ப் புற்றுநோய் எமது நாட்டில் குறிப்பிட்டுக்கூற வேண்டிய ஒன்றா கும். அதிகமானவர்களை பாதிக் கின்றது. அதனால் தான் பல் சுகாதாரத்தை நல்ல முறையில் பேணினால் இதனை வெகுவாகக் குறைக்கலாம்.

புற்றுநோயாக மாறக்கூடிய நோய்களுக்கு காலம் தாழ்த்தாது சிகிச்சை அளித்தல்

பெண்கள் மார்புகளை அடிக்கடி பரிசோதித்தல், வயோதிபப் பெண்கள் சந்தேக அறிகுறிகள் காணப்பட்டால் பரிசோதனை செய்தல். அல்லது அறிகுறிகள் தென்படும் போது புற்றுநோய் மருத்துவரை சந்திப்பது பொருத்தமாக இருக்கும் உணவுப் பழக்கவழக்கங்கள் அதிகளவு கொழுப்பு, புரதம் குறிப்பாக விலங்கிலிருந்து பெறுபவை அற்ற உணவுகள், இரும்புச்சத்து, உயிர்ச் சத்து (ஏ) பற்றாக்குறையில்லாத உணவுகள், பூஞ்சணம் பிடிக்காத உணவுகள், தகரத்தில் அடைத்து வராத உணவுகள், இவைகளை உட்கொள்ளுதல், மதுபானம் அருந்துதல் புகைத்தல், வெற்றிலை சாப்பிடுதல் இவற்றை தவிர்த்தல், எடையைக் காத்து நலனைப்பேணுதல், தொழிற் சாலையில் வேலை செய்பவர்கள் கிருமிநாசினிகள் உபயோகத்தில் ஈடுபாடுடையவர்கள், இரசாயனப் பொருட்களின் பாதிப்பிலிருந்து முகமூடி, கையுறை போன்றவற்றை உபயோகித்தல் சுற்றாடல் மாசுபடுத்தலை தடுத்தல்.

சில மருந்துகளின் நீடித்த பாவனை புற்றுநோயை உண்டாக்கலாம். ஆகவே, வைத்திய ஆலோசனை இன்றி மருந்து உபயோகிப்பது தவிர்த்தல்.

# புதியவகை காலணி



பார்த்தவுடனேயே முகமூடி என எண்ணத் தோன்றும் படத்தில் காணப்படும் உருவம் முகமூடியல்ல. இது ஜப்பான் நிறுவனமொன்று தயாரித்துள்ள புதியவகை காலணியாகும். இதன் நன்மை [illegible] கடற்கரையில் உலாவும் போது கால் மணலில் புதையுண்டு நடையில் வேகம் குறைவதை தவிர்க்கவல்லது. இது 35 அமெரிக்க டொலர் பெறுமதியானது. தற்போது [illegible]களில் அறிமுகமாகியுள்ளது.

# கற்பூரவல்லி

கற்பூரவல்லியை ஓமவல்லி எனவும் அழைப்பர். சதைப்பற்றுள்ள கற்பூரமணமுள்ள, எதிரடுக்கில் அமைந்த இலைகளையுடைய குறுஞ்செடியினம். முழுத்தாவரமும் மருத்துவப் பயனுடையவை. விஷேடமாக இதன் இலை குழந்தை மருத்துவத்தில் முக்கிய மூலிகை.

**மருத்துவக்குணம்**

- இலைச்சாற்றை சர்க்கரை (கற்கண்டு) கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க சீதள இருமல், சளி, மூக்கால் நீர்வடிதல், தடிமன், வயிற்று வலி குணமடையும்.
- இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப்போட தலைவலி நீங்கும். சூட்டைத் தணிக்கும்.
- இம் மூலிகை சிறந்த வியர்வை பெருக்கியாகவும் கோழையகற்றி காய்ச்சல் தணிக்கும் மருந்தாகவும் செயற்படுவதோடு இது சிறுநீர் சம்பந்தமான நோய்கள், பெண் நோய்கள், கல் உண்டாதல், அஜீரணம், மூலவியாதி, வயிறு குடல் சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்த பயன்தரும்.

# மசாஜ் செய்யும் கதிரை



மசாஜ் செய்வதற்கு அந்த இடங்களைத்தேடிச் செல்ல வேண்டிய அவசியம் தற்போது கிடையாது. அதற்கேற்ப அப்பணிகளை செய்யக் கூடிய இலத்திரனியல் கதிரையொன்றை ஜப்பானிய நிறுவனம் தயாரித்துள்ளது.

ஒருவர் இக்கதிரையில் அமர்ந்து இயக்கிவிடும் போது ஒருகருவி முதுகு, கழுத்து, பாதம் என்பனவற்றை அழுத்தும். இயற்கையாக நடைபெறும் செயலாக இதனை ஒருவர் உணர்ந்து கொள்வார். இவ்வாறான 965 செயற்பாடுகளை இக்கதிரை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கண்ணுக்கு நெருக்கமாகவைத்து வாசித்தால் கண்பார்வை பாதிக்கப்படலாம்

புத்தகங்கள் , பத்திரிக்கைகள் வாசிக்கும்போது கண்களுக்கு மிகவும் நெருக்கமாக வைத்து வாசிப்பதனால் கண்பார்வை பாதிக்கப்படலாம் என்று சமூக மட்டத்தில் நிலவிய அபிப்பிராயம் இப்போது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் கண்வைத்திய நிபுணர் டாக்டர் டக்ளஸ் பிரிடேரிக்கின் தலைமையில் நடைபெற்ற ஆய்வின் போது இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டதாக பிரிட்டிஷ் மெடிக்கல் ஜேர்னல் (British Medical Journal) மருத்துவ சஞ்சிகை கூறுகிறது.

புத்தகங்களை கண்ணுக்கு நெருக்கமாக வைத்து வாசிப்பதால் கண்பார்வை கெட்டு விடவும், ஓரளவு காணப்படும் பார்வைக்குறைவு பெரிதா[illegible]தற்கும் வாய்ப்புண்டு என்று அந்த ஆராய்ச்சி நிரூபிக்கின்றது.

புத்தகங்கள். பத்திரிகைகளை முகத்திற்கு நெருக்கமாக வைத்து வாசிக்கும்போது எழுத்துக்களை அறிந்து கொள்ள புதிதாக முயற்சிப்பதாகவும் அதே நிலையில் பார்வையை தொடர்ந்து வைத்துக்கொண்டிருப்பதாலும் காலம் செல்லும்போது கிட்டப்பார்வை குறைந்து போக இடமுண்டு என்றும் அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது.

# குளிர்சாதனப் பெட்டியில் வைக்கும் உணவுகள் கெடாமல் இருப்பது எப்படி?

குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்படும் உணவு வகைகள் சிலகாலம் வரை கெடாமல் இருக்கும். குளிரின் காரணமாக இவ்வாறு உணவு கெடாமலிருப்பது எப்படி? உணவுகள் கெட்டுவிட்டன என்று கருதுவது அவற்றின் மீது பக்ரீரியா மற்றும் கிருமிகள் உண்டாகி உணவுப்பொருட்களில் நாம் விரும்பும் சுவை, நிறம், மணம் வித்தியாசப்படுவதாகும்.

இவ்வாறு உணவுப்பொருட்களில் தோன்றும் கிருமிகள் அந்த உணவுகளிலுள்ள போசணைகளை உறிஞ்சி உயிர்வாழ்கின்றன. அதாவது உணவுகள் கெட வேண்டுமாயின் கிருமிகளின் உடலில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். 'உணவுகள் குளிரூட்டிகளில் வைக்கப்படும்போது அவற்றின் உஷணம் ஐஸ் உறையும் உஷ்ணத்தை விட மிகவும் குறைவடைகின்றது. இதனால் உணவிலுள்ள நீர்த்தன்மை முழுவதும் ஐஸ்கட்டியாக மாறிவிடுகின்றது. பக்ரீரியாவும திரவ வடிவில் இருக்கும் நீரும் இவ்வாறு கெட்டியாகி விடுகின்றது. இதனால் உயிரியல் இரசாயன எதிர்விளைவுகள் ஏற்படக்கூடிய சூழல் இல்லாமல்போகின்றது. அவை செயலிழந்து விடுகின்றன. அதாவது உணவுப்பொருட்கள் கெட்டுப்போவது நிறுத்தப்படுகின்றது.

# மன்னாகண்டலில் சட்டவிரோத கல் அகழ்வு பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு ஆபத்து

முத்து ஐயன்கட்டு மன்னாகண்டல் கிராமத்தில் வயல் நிலப்பரப்புக்களில் இடம்பெற்றுவரும் கல் அகழ்வு நடவடிக்கைகளால் அப்பகுதியின் பயிர்ச்செய்கைக்குரிய தரைய



கல் அகழப்பட்டபின் குன்றும் குழியுமாக காணப்படும் பயிர் நிலம்

மைப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகிறது.

அண்மைக்காலமாக கட்டடங்கள் கட்டப்படுவது அதிகரித்துள்ளமையால் அக்கட்டடத்தேவைகளுக் கான வெண்கற்களைப்பெறும் பொருட்டே மன்னாகண்டல் பகுதியில் கல் அகழ்ந்தொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இவ்வாறாக அகழ்ந்தெடுக்கப் படும் கற்கள் நாளொன்றுக்கு 25-30 தடவைகள் உழவு இயந்திரப் பெட்டிகளில் கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருபோக விவசாயத்தினை நம்பிய வாழ்க்கை முறையைக் கொண்ட முத்துஐயன்கட்டு பகுதி தரைத்தோற்றத்தினையும், மண் வளத்தினையும் சீரான முறையில் பேண வேண்டிய அவசிய நிலை காணப்படுகையில் மன்னாங்கண்டல் பகுதியில் இடம் பெற்றுவரும் இவ்வாறான கல் அகழ்வுகளால் பலநூறு ஏக்கர் வயல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உதவாமல் போய்க்கொண்டிருக்கின்றன.

**பீ.கவியரசன்**
**ஒட்டுசுட்டான் செய்தியாளர்**

ஐந்து-ஆறு அடிகள் நிலத்தினைத் தோண்டி இக்கற்கள் அகழப் படுவதனால் பெரிய குழிகளும் அதன் அண்மையில் உயர்ந்த மண் மேடுகளுமாக சமதரையற்ற தரைத்தோற்றம் உருவாகி வருகின்றது. அத்துடன் வெட்டப்படும் குழிகளுக்குள் நீர் தேங்கிக் காணப்படுவதால் அருகேயுள்ள பயனுள்ள சிலகுளங்கள் தமது நீர் நிலைகளை இழக்க நேரிடுகிறது.

மற்றும் இக்கல் அகழ்விற்காக நிலம் தோண்டப்படுவதால் அருகில் உள்ள பாரிய மரங்கள் வேர்ப் பிடிப்பை இழந்து சரிந்துவிழும் அபாய நிலையும் காணப்படுகிறது.

முத்துஐயன்கட்டு குளத்து நீர் மூலம் உருவாகியுள்ள "வெளி வயல்" எனும் சிறுகுளம் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் வயல் செய்யப்பட்டுவந்தது, நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக்கிடக்கும் இக்குளத்தின் வான்பகுதியிலும் தற்போது கல் அகழ்பவர்களின் நடவடிக்கைகள் பரவியிருக்கின்றன. அத்துடன் இக்குளத்தின் நீர்பிடிப்பு பகுதியிலும் கல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இக்குளம் பெரு வெள்ளம் ஏற்பட்டால் தூர்ந்துபோய் விடக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இவை தவிர முத்துஐயன்கட்டு பிரதான குளத்தின் வாய்க்கால்களின் ஓரங்களிலும் இக்கல் அகழ்வு இடம் பெற்று வருவதனால் இவ் வாய்க் கால்கள் உடைப்பெடுக்கும் பேராபத்தில் இருக்கின்றன. குறிப்பாக கல் ஏற்றவரும் உழவு இயந்திரங்களின் தற்காலிகமான சட்டவிரோதப்பாதைகள் பெரும்பாலும் வாய்க்கால்களை அண்டியதாகவே காணப்படுவதனால் வாய்க்கால் ஓரங்கள் பெரும் பாதிப் படைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு கல் அகழப்படும் காணிகளில் உரிமையாளர்கள் குறிப்பிட்ட விடயம்தொடர்பில் கவனிக்காமல் இருப்பது வேதனைக்குரியது.

இக்கல் அகழ்விற்காக இப்பகுதி பெற்றோர்கள் சிலர் தமது பிள்ளைகளை யும் ஈடுபடுத்தி வருகின்றனர் எனத் தெரிகிறது. இதனால் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படை கிறது.



கல் அகழப்பட்ட பகுதியில் நீர் தேங்கியுள்ளது.

இச் சட்டவிரோத கல் அகழ்வை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தடுத்து நிறுத்துவதற்காக பல உத்தரவுகளைப் பிறப்பித்த நிலையிலும் ஒருசிலர் இவ் எச்சரிக் கையையும் அசட்டை செய்து தமது கல் அகழும் நடவடிக்கையில் ஈடு பட்டு வருகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் களவாக கல்லை ஏற்றி செல்வதாகத் தெரிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் வளமிக்க விவசாய பூமி வெகுவிரைவில் பயனற்ற நிலமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

## முல்லை.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகள், இயந்திரங்கள் இலவசமாக திருத்தம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் ஆதரவில் போறூட், தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (ரைற்றா) நிறுவனங்களினால் முல்லைத் தீவில்



சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான படகு,வெளி இணைப்பு இயந்திரம் என்பன இலவசமாக திருத்தி வழங்கப்பட்டு வருகின்றது.

முதலாவது தளம் சிலாவத்தையிலும், இரண்டாவது தளம் அம்பலவன் பொக்கணையிலும் அமைந்துள்ளது. அம்பலவன்பொக்கணை யில் கடந்த 14 ஆம் திகதி அன்று ஒரு தொகுதி படகுகளை மீனவர்களுக்கு வழங் கும் நிகழ்வு தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்புநிறுவன நிதிப் பணிப்பாளர் தலைமையில் ஆரம்பமானது நிகழ்வில் கருத்துரைகளை போறூட் நிறுவன வன்னித்திட்ட முகாமையாளர் ஆர்னே, அம்பலவன் பொக்கணை பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் வேங்கைத் தமிழ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருத்தப்பட்ட படகின் ஆவணங்களை போறூட் நிறுவன திட்டப்பணிப்பாளர், ஆர்னே, உதவித் திட்டப்பணிப்பாளர், முல்லை மாவட்ட போறூட் நிறுவன இணைப்பாளர் கே.கெங்கநாதன் அம்பலவன் பொக்கணை பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் வேங்கைத்தமிழ் ஆகியோர் வழங்கினார்கள்.

## இருக்கைகள் இன்றி மக்கள் அவதி

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை மகப்பேற்றுமனையில் சிறுபிள்ளைகளுடன் செல்லும் தாய்மார்கள் இருக்க இடமின்றி அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மேற்படி மகப்பேற்றுமனையில் இருக்கைகள் அற்ற நிலையில் நீண்ட நேரமாக சிறுபிள்ளைகளைத் தூக்கியவாறு தாய்மார் நிற்கின்றமையையும் சிலர் மரநிழல்களில் நிலத்தில் சிறுபிள்ளைகளுடன் அமர்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. மேற்படி அவலத்தைப் போக்க இருக்கை, இடவசதி மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

## ஒட்டுத்தொழிற்சாலை பணியாளருக்கு 15 வருடமாக கொடுப்பனவு இல்லை

–பணியாளர் பொருளாதார நெருக்கடியில்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற் சாலை பணியாளர்களுக்கு கடந்த 15 வருடங்களாக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை என பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச கூட்டுத்தாபனங்கள் அனைத்திற்கும் வேலை இழப்பீட்டுக் கான நஷ்டஈடுகள் வழங்கப்பட்ட போதும் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற் சாலை பணியாளர்களுக்கு மட்டும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இக்கொடுப்பனவு 1990ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்படாமையினால் இத்தொழிற்சாலையில் வேலைசெய்த வறிய பணியாளர்கள் பொருளாதார ரீதியாக பெரும் நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக உரியவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டும் இன்றுவரை நடவடிக்கை எதுவும் எடுத்ததாக தெரியவரவில்லை. எனவே உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என வினா எழுப்புவதோடு தமக்கு வர வேண்டிய கொடுப்பனவுகள் அனைத்தையும் பெற்றுத்தருவார்களா எனவும் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (05)

## வட்டக்கச்சி காவல்துறையினரால் குற்றத்தடுப்பு நடவழக்கை தீவிரம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தின் தமிழீழ காவல்துறையினரால் வீதி ஒழுங்கு, குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி காவல் பணிமனையினரால் அண்மையில் இராமநாதபுரம் பகுதியில் 14 லீற்றர் கசிப்பு கைப் பற்றப்பட்டதுடன், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளனர்.

இதேவேளை இராமநாதபுரம் பகுதியில் கடந்த புதன்கிழமை 70 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், நேற்று முன்தினம் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளிடம் குற்றப்பணம் அறவிட்டதுடன் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி சி.இராஜ கோபால் தெரிவித்துள்ளார். (15)

## வட்டக்கச்சி ம.வி.பழைய மாணவரால் கணினி அச்சு இயந்திரம் அன்பளிப்பு

(வட்டக்கச்சி)


வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு பழைய மாணவர் ஒருவரால் கணினி அச்சுஇயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சுவிஸ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மேற்படி பாடசாலையின் பழைய மாணவரான வைத்திலிங்கம் யோகலிங்கம் என்பவரே ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கணினி அச்சுஇயந்திரம் ஒன்றை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவ்இயந்திரத்தை பழைய மாணவர் பாடசாலை உதவி முதல்வரிடம் கையளித்ததுடன் இயந்திரத்தை இயங்கவைத்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார். (12)

## பூநகரி மகாவித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பு

(பூநகரி)

கனடாவிலுள்ள பூநகரி சமூக அபிவிருத்திச்சங்கத்தால் பூநகரி



மகாவித் தியாலயத்திற்கு ஒலிபெருக் கிச்சாதனத் தொகுதி ஒன்று கடந்த வாரம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பூநகரி ம. வி.அதிபர் பொன் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கனடா பூநகரி சமூக அபிவிருத்திச்சங்கப்பிரதிநிதி ந. திருஞானபவான் பொருள் தொகுதியிணைக்கையளித்ததுடன் கருவியை இயக்கிவைத்தார்.

மாணவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் கனடா பிரதிநிதியின் உரையைத் தொடர்ந்து ஆசிரியர் விசுவாசத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. (34)

# பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை

### ஜேர்மன், சுவிஸ் தூதுவர்களுக்கு கூட்டமைப்பு விளக்கம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாத நிலையிலும் பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜேர்மன், சுவிற்சர்லாந்து நாடுகளின் தூதுவர்களிடம் எடுத்துக்கூறியுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி தூதுவர்கள் இருவரையும் தனித்தனியாக கூட்டமைப்பினர் சந்தித்து தற்போதைய நிலைபற்றி விளக்கியுள்ளனர். இச்சந்திப்பில் கூட்டமைப்புத்தலைவர் இரா. சம்பந்தன், சிரேஷ்ட உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தூதுவர்களுக்கு அவர்கள் விளக்கும் போது யுத்தநிறுத்த உடன்பாடு கடந்த மூன்று ஆண்டுகளாக அமுலில் இருக்கின்ற போதும் சமாதானப் பேச்சுக்கள் இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை. பொதுக்கட்டமைப்பும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் பிரதான நான்கு பிரிவுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலும் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கின்றனர். ஆயினும் இராணுவத்தினர் போராளிகளை தாக்கி வருகின்றனர். ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# பிரதி அமைச்சரின் வாகனத்திலிருந்து பி.சபை உறுப்பினர் மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

தெஹிவளை பிரதேசசபை உறுப்பினர் சேனக்கதமயந்த சில்வா பயணம் செய்த வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதன் போது ஒருவர் காயமடைந்ததாகவும் பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் பிரதியமைச்சர் ஒருவரும் அவரது மெய்ப் பாதுகாவலரு[illegible] மேற்படி துப்பாக்கிப் பிரயோ[illegible]த செய்துள்ளனர் என அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரி அ[illegible]ரட்ணம் தெரிவித்தபோது மேற்படி பிரதேசசபை உறுப்பினர் தனது நெருங்கிய நண்பர் ஒருவருடன் பேருவளையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த வேளை தனது வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்ததாகவும் மொரட்டுவ புதிய வீதியை அண்மித்தபோது வாகனத்தை நோக்கி துப்பாக்கி வேட்டு நடத்தப்பட்டதாகவும் புகார் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பிரதியமைச்சரும், அவரது பாதுகாவலரும் அதன் பின் பொலிஸ் நிலையம் வந்து பிரதேச சபை உறுப்பினரே தம்மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் பொலிசார் மிகுந்த குழப்ப நிலைக்குள்ளாகியுள்ளதுடன் விசாரணையை தொடர்வதாக தெரிவித்துள்ளனர்.

# சனாதிபதித் தேர்தலுக்கான திகதியை உறுதிப்படுத்த அரசியல் கட்சிகள் கோரும்

(கொழும்பு)

சிறிலங்காவில் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினம் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளதால் அனைத்து அரசியல்கட்சிகளினதும் செயலர்கள் தேர்தல் நடைபெறும் தினத்தை உறுதிப்படுத்திக் கூறுமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

இதில் முதலிடம் வகிக்கும் ஜே.வி.பி பாராளுமன்றக் குழுவின் தலைவர் விமல் வீரவன்ச, பிரதமர் மகிந்தராஜபக்ஷ மூலம் தனது கோரிக்கையை விடுத்துள்ளார். இது தொடர்பாக இவ்விருவருக்கும் இடையில் நீண்ட கலந்தாலோசனை ஒன்று நடைபெற்றுள்ளது.

இவ்வாறான கோரிக்கையை ஏனைய கட்சிகளும் முன்வைக்க இணங்கியுள்ள நிலையில் தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு பற்றி அறிவிக்கப்படவில்லை.

## இராணுவத்தின் குடிநீரில் சிலர் நஞ்சு கலக்க முயற்சியாம்

(கொழும்பு)

வவுனியாவில் இராணுவத்தினருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் நச்சுப் பதார்த்தத்தினை கலப்பதற்கு சிலர் திட்டமிட்டு வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்துள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் நச்சுப் பதார்த்தத்தினை கலப்பதென்பது சுலபமான காரியமாக இருக்கமுடியாது. குறிப்பிட்ட இடங்களிலுள்ள நீர் விநியோக நிலையங்களுக்கு மாத்திரம் பாதுகாப்பு வழங்க முடியும். அவ்வாறான பகுதிகளுக்கு தற்போது பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

–பொதுக்கட்டமைப்பிற்கெதிராக–

## சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

மாத்தறை நகர்ப்பகுதியில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஜே.வி.பி ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த சுமித் பீரிஸ் என்பவர் மாத்தறை வைத்திசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடந்த இச்சம்வம் பற்றி ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில், 12 பேர் கொண்ட குழுவினர் வான் ஒன்றில் வந்து தாக்குதல் நடத்தியதாகவும் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி விட்டு சுவரொட்டிகளை கிழித்தெறிந்ததாகவும் தெரிவித்துள்ளது.


## பணிநிலை வேண்டுகை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு கீழ்க்காணும் பணிநிலைக்கு உரியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பல் வைத்தியர்

தகைமைகள்:–

01. விண்ணப்பதாரர்கள் இலங்கை சுகாதார மருத்துவசபையில் பதிவு செய்தவராக இருக்க வேண்டும்.
02. தமிழில் நன்றாக தொடர்பு கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.
03. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடனும், இலங்கை அரசாங்க மருத்துவ நிறுவனங்களுடனும் இணைந்து கடமையாற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.
04. அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.
05. வட கிழக்கின் சகல மாவட்டங்களிலும் கடமையாற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.
06. நடமாடும் பல்வைத்திய சிகிச்சைப் பிரிவில் கடமையாற்ற வேண்டும்.
07. வாரத்தில் 6 நாட்கள் கடமையாற்ற வேண்டும்.
08. தகுதியும் அனுபவமுள்ளவருக்கு வேதனமாக மாதம் ரூபா 25000/– வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பத்துடன் சுய விபரக் கோவையையும் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும.

விண்ணப்பம் அனுப்பும் முகவரி:-

தலைமைக்காரியாலயம்,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
A9, பிரதான வீதி,
கிளிநொச்சி

(சி.12347)



## Post of Dental Surgeon

Excellent opportunity for enthusiastic energetic and competent dental surgeon to develop lucrative practice with very attractive salary and benefits. Candidates with the following qualification are required to apply.

01. A Registered dental parctioner currently registered with the medical council of srilanka.
02. Able to communicate in Tamil
03. Able to network with I/NGO and government medical institutions
04. Must have previous experience in developing dental practice.
05. Should be able to work in the north and east districts.
06. Should be able to work in mobile dental clinics.
07. Should work six days a week.
08. Suitable candidates will be paid a salary of Rs.25000/- per month.

**Please send your curriculum vitae (CV) to the following address before 15 th August 2005.**

Head office,
Centre for Health care.
A9 Road,
Kilinochchi,
Srilanka.

(சி.12347)



## மருதம் வாணிபம் நடாத்தும் ஏல விற்பனை

2005.07.24

எமது களஞ்சிய இருப்புக்களைத் துரிதமாக வெளியேற்றுவதற்கு 2005.07.24 ஆம் நாள் மு.ப 10.00 மணிக்கு கிளி/மத்தியகல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வளாகத்தில் ஏல விற்பனை நடைபெறும்.

*பொருள் விரிப்பு

- இலத்திரனியற் பொருட்கள்
- மின்னியற் பொருட்கள்
- புடைவை வகைகள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- இன்னும் பல்வகைப் பொருட்கள்

இன்று பொருட்களை ஏல விற்பனை நடைபெறும் கட்டடத்தில் பார்வையிட முடியும்.

*கவனிப்புக்கு

- ஏல விற்பனையில் பங்கு கொள்வோர் ரூபா ஐம்பது (50.00) செலுத்தி நுழைவு அனுமதி பெறுதல் வேண்டும்.
- ஏலத்தில் பொருள் பெறுபவர் முழுப்பெறுமதியினையும் செலுத்தி உடனும் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.
- முழுப்பெறுமதியினையும் உடன் செலுத்த முடியாதோர் 50% த்திற்குக் குறையாத தொகையைச் செலுத்தி மூன்று (03) நாட்களுக்குள் மீதித்தொகையைச் செலுத்தி பொருட்களை அகற்றுதல் வேண்டும்.
- ஏலத்தில் பங்கு கொள்வோர் தமக்கிடையில் மறைமுக இலாபம் கருதி பேரம் பேசுதல் உடன்படிக்கை செய்தல் பங்கு கொள்வோரைத் தகைமை இழக்கச் செய்யும்.

(சி.12348)

# பாகிஸ்தானின் அணுவாயுதங்களை தம்வசப்படுத்தி தீவிரவாதிகள் அந்நாட்டையே கைப்பற்றலாம்

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எச்சரிக்கை

பாகிஸ்தானிலுள்ள அணு மற்றுமஅணுவாயுதத்தை தங்கள் வசப்படுத்தி அந்த நாட்டையே தீவிரவாதிகள் கைப்பற்றும் அபாயமுள்ளது என்று அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் நான்கு நாள் பயணத்தை முடித்துக்கொண்டு நன்றாக புறப்படுவதற்கு முன் அமெரிக்கா சீ. என். என். தொலைக் காட்சிக்கு பிரதமர் மன்மோகன் சிங் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது

ஒசாமா பின் லேடன் தலைமையிலுள்ள அலஹைய்தர் தீவிரவாத இயக்கம் பாகிஸ்தானில் பெரிய முகாம் அமைத்து செயற்படுதகின்றது ஆயுத பயிற்சி அளிக்கிறது எந்த நேரமும் அல்-ஹைய்தா தீவிரவாதிகள் பாகிஸ்தான் வசம் உள்ள அணு குண்டு மற்றும் அணு ஆயுதத்தைக் கைப்பற்றும் அபாயமுள்ளது அவர்கள் அதிபர் முஷாரப்பைத்தூக்கி எறிந்து பாகிஸ் தானைக்கைப்பற்றலாம் என்றார்.

பாகிஸ்தானில் அல்- ஹைய்தா முகாம்கள் பெரிய அளவில் இருக்கின்றதா? என்று கேட்டபோது, அதில் சந்தேகம் வேண்டாம். அண்டைநாடுகளில் அணு ஆயுதம் பரவியதால் தாங்கள் பாதுகாப்பாக அணு குண்டு தயாரித்தோம். எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு பெரிய அளவில் மிரட்டல் இருந்ததால் வேறு வழியின்றி அணுகுண்டு தயாரித தோம்.

மேலும் காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குவதை பாகிஸ்தான் நிறுத்தாவிடில் அந்த நாடுடன் நடக்கும் சமரச பேச்சை இ ரத்த செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவோம்

பாகிஸ்தானின் இருந்து தீவிரவாதிகள் எல்லை தாண்டி வன்முறையில் ஈடுபட்டால் அதை எதிர்கட்சிகள் பெரிதுபடுத்தி பிரச்சினையை சிக்கலாக்கி விடுவார்கள். நான் முஷாரப்பை நம்புகிறேன். பாகிஸ் தான் மண்ணில் இருந்த தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எதிராக செயற்பட அனுமதிக்க மாட்டேன் என்று முஷாரட்உறுதி அளித்துள்ளார். அந்த உறுதி மொழியை நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித் தார்.



புதுடில்லிஜெய்ப்பூர் இடையே வாகன தேடுதல் மற்றும் கண்காணிப்பு திட்டத்தை மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தொடக்கி வைத்தபோது

# மேட்டூர் அணை நீர் உயர்ந்ததால் காவிரிக்கரை பயிர்கள் மூழ்கின

மேட்டூர் அணை நீர்மட்டம் 71அடியாக உயர்ந்தது. இதனால் காவிரி கரையோரம் சுமார் 100ஏக்கரில் விவசாயப் பயிர்கள் நீரில் மூழ்கின.

மேட்டூர் அணை ஆண்டு தோறும் ஜுலை 12-ஆம்திகதி திறக்கப்பட்டு ஜனவரி 28-ஆம் திகதி மூடப்படுவது வழக்கம். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யாததாலும், நடுவர்மன்ற தீர்ப்புப்படி கர்நாடகம் காவிரியில் உரியநீரை திறந்துவிடாததாலும் அணை வறண்டு காணப் பட்டது. டெல்டா விவசாயம் பாதிக்கப் பட்டது.

இந்நிலையில் கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள கேரள வயநாடு பகுதியிலும் பலத்தமழை பெய்து வந்தது. இதனால் கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. கபினி அணை நிரம்பிய தால் அதில் இருந்து 30ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. அணையில் காய்ந்து கிடந்த நிலப்பரப்பும் நீர்பரப்பாக மாறியது.

மேட்டூர் அணையில் நர் மட்டம் உயர உயர காய்ந்து கிடந்த நிலப்பரப்பிலும் தண்ணீர் சூழ்ந்தது. இதனால் காவிரி கரையோரம் பல இடங்களில் சுமார் 100ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்தபயிர்கள் நீரில்மூழ்கின.

மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் மீன் பிடி தொழில் அமோக மாக நடந்து வருகிறது.ஆனால் தற்போது நீர்வரத்து குறையத் தொடங்கியுள்ளது.

# 72 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் தேர்தல் அலுவலரால் நிராகரிப்பு

போலி வாக்காளர்கள் 72 ஆயிரம் பேரின் விண்ணப்பங்களை தமிழக தலைமை தேர்தல் அலுவலர் நிராகரித்து உத்தரவிட் டுள்ளார்.

தமிழகம் முழுவதும் பல்வேறு தொகுதிகளில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு வருவதாக தி.மு.க. உட்பட பல்வேறு எதிர்க்கட்சிகள் பெருமளவான புகார்களை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்து இருந்தன. இதையடுத்து தமிழகத்தின் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி துரிதகதியில் நடந்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக தலைமை தேர்தல் அலுவலர் நரேஷகுப்தா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு தமிழகத்தின் வாக்காளர் பட்டியலை சீரமைத்து மாநில தேர்தல் துறை உருவாக்கி வரும் நடவடிக்கைகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கி இருக்கிறது. அதன்படி தீவிர தணிக்கைப் பணிகள் தனித்தனியே 39 சட்டசபை தொகுதிகளிலும் நடந்து வருகின்றன. இவற்றின் திருத்தி யமைக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் எதிர் வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வெளியிடப்படும்.

ஒட்டுமொத்தமாக வழங்கப்பட்ட விண்ணப்பங்களில் 72 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டு உள்ளன. கையெழுத்து இல்லாதவை விலாசம் இல்லாதவை 18 வயதுக்கு கீழானவரின் விண்ணப்பங்கள் அனைத்தும் இந்த வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளன.


கண்ணீர் அஞ்சலி

இன்று அழாத விழி இன்னொரு நாள் அழா!



பிறப்பு 15 01 1926

இறப்பு 19 07 2005

அமரர்
சரவணமுத்து சிவஞானசுந்தரம்

யதுர் என்ர பிறைஷ் நிறுவன பணிப்பாளர்
சி.திருக்கேதீஸ்பரன் உத்தியோகத்தர் சி.நித்தியானந்தராசா
ஆகியோரின் தந்தையும் யூனிக்கா வில்டஸ் உரிமையாளர்
வ.கனக லிங்கம் அவர்களின் மாமனாரும் ஆன
அமரர் சிவஞான சுந்தரம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
யதுர் என்ரபிறைஷ் யூனிக்கா வில்டஸ்
உத்தியோகத்தர், ஊழியர்கள்
(வவுனியா, கிளிநொச்சி)

(6381)


# சிறை ஊழியர்களின் தவறினால் உயிருடன் உள்ளவருக்கு மரணச்சடங்கு

சிறையில் ஏற்பட்ட தவறு காரணமாக உயிரோடு இருப்பவருக்கு உடல் தகனம் நடந்தது.

கேரளமாநிலம் ஆலப்புழை மாவட்டம் பூஜாப்புரா மத்திய சிறையில் கைதியாக இருந்தவர் அனில் குமார். இவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவரை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர்.

அப்போது அனில் குமாரை அடையாளம் காட்ட அவருக்கு 7273 என்ற எண்ணை சிறை ஊழியர்கள் கொடுத்து அனுப்பினார்கள் உண்மையில் அனில் குமாரின் எண் 7372 என்பதாகும். 7273 என்ற எண் ராஜேஷ்தான் என்ற கைதியினுடையது. தவறுதலாக எண்ணை மாற்றி கொடுத்து விட்டனர்.

மருத்துவமனையில் சிகிச்சை அளித்தும் பலன் இல்லாமல் அனில் குமார் இறந்துவிட்டார். அவரது அடையாள எண்ணான 7273-ஐ வைத்து இறந்தது ராஜஸ்தான் என்று முடிவு செய்து உடலை பெற்று செல்லும்படி ராஜேஷின் வீட்டுக்கு சிறை அதிகாரிகள் தகவல் கொடுத்தனர்.

ராஜேஷின் மாமாவும், பக்கத்து வீட்டுக்காரர்களும் மருத்துவமனையில் பிணஅறைக்கு வந்து உடலை பார்த்தார்கள். உடல் பிரேத பரிசோதனை செய்யப் பட்டதால் சரிவர அடையாளம் தெரியவில்லை.

ஆனாலும் ராஜேஷின் மாமாவும், பக்கத்து வீட்டுக்காரர்களும் அரை மனதுடன் உடலை பெற்றுக் ஊருக்கு கொண்டு சென்று தகனமும் செய்து விட்டார்கள்

இது நடந்து 10 நாட்கள் கழித்துத்தான் ராஜேஷ் உயிருடன் சிறையில் இருப்பது தெரியவந்தது. சிறை ஊழியர்கள் அடையாள எண்ணை மாற்றிக் கொடுத்ததால் இந்த ஆள்மாறாட்டம் நடந்துள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை, அனில்குமார் கிறிஸ்தவர். கிறிஸ்தவர்களின் உடலை அடக்கம் செய்வதுதான் மரபு ஆனால் அனில்குமார் உடலை எரித்து விட்டார்கள்.

இந்த விவகாரத்தை கேரள சட்டசபையில் எதிர்க்கட்சியினர் எழுப்பி சரமாரியாகக் கேள்வி கேட்டனர். அதற்கு பதில் அளித்த முதல்வர் உம்மன்சாண்டி தவறு செய்த சிறை ஊரியர்கள் மீது நடவழக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

# வீதிவிபத்துக்களை தடுக்க ஒளிப்பதிவுக் கருவி மூலம் கண்காணிப்பு

டி. ஆர். பாலு

நாடெங்கிலும் விபத்துக்களை தடுக்க ஒளிப்பதிவுக்கருவி மூலம் வாகன போக்குவரத்து கண்காணிக கப்படும் என்ற இந்திய மத்திய அமைச்சர் டி. ஆர். பாலு தெரிவித்தார்.

புதுடில்லிக்கும், ஜெய்ப்பூருக்கும் இடையே வாகன தேடுதல் மற்றும் கண்காணிப்பு திட்டத்தை மத்திய கப்பல் வீதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி.ஆர். பாலு தொடங்கி வைத்து பேசியதாவது:-

அதிவேக பயணத்திற்கு துணை புரியும் நெடுஞ்சாலைகளை உருவாக்குவது மட்டுமே அரசின் இலக்காகி இருந்து விட முடியாது. வீதிகளை பயன்படுத்தும் பயணிகள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்பு சமுதாயத்தின் கவனத்திற்குரிய முக்கிய பிரச்சினையாகும். வீதிகளை முறையாகப் பயன்படுத்தாது வேகமாக செல்வதால் கடும் விபத்துக்கள் நேரிடுகின்றன.

வீதியை பயன்படுத்துவோருக்கும், வீதி அருகே வசிப்போருக்கும் வீதி பாதுகாப்பு குறித்த அம்சங்களில் கல்வி வழங்குவதும், வீதி விபத்துக் களில் சிக்குவோருக்கு உடனடி நிவாரணம் வழங்குவதும் வீதிப் பாதுகாப்பின் முக்கிய நோக்கங் களாகும்.


தற்போது அமைக்கப்பட்டு வரும் தேசிய நெடுஞ்சாலைகள் சர்வதேச தரத்திலான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன. அவசர நிலை தொலைபேசி பெட்டிகள், ஒலிப்பதிவுக்கருவி மூலமான போக்குவரத்து கண்காணிப்பு, விபத்துக் களினபோது உடனடி மீட்பு கட்டமைப்பு போன்ற வீதி பயணப்பாதுகாப்பு வசதிகள் நாடெங்கிலும் உருவாக் கப்படுகின்றன. என்றார்.

## வழக்கிலிருந்து நக்கீரன் விடுதலை

இந்திய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் தீவிரவாத பகுதியாக தமிழக அரசு அறிவித்தமை செல்லுபடியற்றது என இந்திய பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளன இதன்படி நக்கீரன் கோபால் மீது இந்திய பயங்கர வாத சட்டத்தின் கீழ் தொடர முடியாது என்று நீதிமன்றம் கூறி யுள்ளது.

# வேகங்களில் பணிந்தனர் முன்னணி வீரர்கள்
# 500 ஆவது மைல் கல்லை தொட்டார் மெக்ராத்





ஆஷஸ் தொடரில் 'வேகங்கள்' தூள் கிளப்பு கின்றனர் ஹார்மிசன் ஐந்து விக்கெட் வீழ்த்த லோர்ட்ஸ் டெஸ்டில் அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 190 ஓட்டங்களுக்குச் சுருண்டது. பதிலுக்கு மெக்ராத் ஐந்து விக்கெட் வீழ்த்தி சாதிக்க இங்கிலாந்து அணியும் திணறியது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட பாரம்பரிய மிக்க ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது.முதல் டெஸ்ட் நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸ் அரங்கில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்றஅவுஸ்திரலிய அணித் தலைவர் பொண்டிங் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இங்கிலாந்தின் இளம்வேகப்பந்து வீச்சுப் படை சிறப்பாகச் செயற்பட்டது. முதல் ஓவரை வீசிய ஹார்மிசன் தொடர்ந்து நெருக்கடி கொடுத்தார். அடுத்து வந்த ஹோகார்டும் சிறப்பாகப் பந்துவீச அவுஸ்திரேலிய அணி ஆடிப்போனது. 87 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து திணறியது. கில்கிறிஸ்ட் (கொடுத்த நம்பிக்கை 26) அதிக நேரம் நீடிக்கவில்லை. 126 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். காடிட்ச் (27) வோர்ன் (28) இணைந்து ஓரளவுக்கு ஓட்டம் சேர்த்தனர்.

.இறுதியில் அவுஸ் திரேலியஅணி முதல் இன்னிங்சில் 40.2 ஓவரில் 190 ஓட்டங்களுக்குச் சுருண்டது. அபாரமாக பந்து வீசிய ஹார்மிசன் டெஸ்ட் அரங்கில் ஆறாவது முறையாக ஐந்து விக்கெட்டைக் கைப்பற்றினார். அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் மெக்ராத்வேகத்தில் சரிந்தனர். சொன்னது போல 500 ஆவது விக்கெட்டாக ரெஸ்கோதிக்கை வீழ்த்திய இவர், அடுத்து ஸ்ரோஸ்,தலைவர் வோன், பெல் (6), பிளின்டொப ஆகியோரை வெளியேற்றினார். இதன் மூலம் ஒட்டு மொத்தமாக விக்கெட் எண்ணிக்கையை 504 ஆக உயர்த்திக்கொண்ட மெக்ராத், பலத்த போட்டியை உறுதி செய்தார். பின்னர் பிரட்லீ வேகத்தில் ஜெரைண்ட் ஜோன்ஸ் (30), கைல்ஸ் (11) ஆட்டமிழக்க இங் கிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் முதல் இனிங்சில் ஏழு விக்கெட் இழப்புக்கு 92 ஓட்டங்கள் எடுத்து திருந்தது. முதல் டெஸ் டில் விளையாடும் இளம் பீட்டர்சன் 57 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் இங்கிலாந்து 155 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.



அனுபவ பந்து வீச்சை வெளிப்படுத்திய மெக்ராத் டெஸ்ட் வாழ்வில் 27 ஆவது முறையாக ஐந்து விக்கெட் வீழ்த்தினார்.

# இங்கிலாந்து-அவுஸ். வீரர்களுக்கு
# பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு

தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகள் பங்குகொள்ளும் ஆஷஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் அனைத்து வீரர்களும் கம்ப்டன்மில்லர் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஆடிய இங்கிலாந்து வீரர் டெனிஸ் கம்ப்டன் அவுஸ்திரேலிய வீரர் கெய்த்மில்லர் ஆகியோரின் ஞாபகார்த்தமாகஇந்தப் பதக்கம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆலோசனையை மில்லிரின் மனைவியான மேரி தெரிவித்தார்.

மேற்படி வீரர்கள் இருவரும் 1950ஆண்டுகளில் சிறந்த நண்பர்களாக இருந்தனர். இந்தப் பதக்கம் லோட்ஸ் மைதானத்தில் உள்ள கம்ப்டனின் சிலைக்கு முன்பாக வைத்து அளிக்கப்படவிருக்கின்றது.

# இங்கிலாந்து கவுண்டி அணியில்
# அக்தர் சிறப்பு பந்துவீச்சு

கவுண்டி கிரிக்கெட்டில் அசத்துகிறார் சொகைப் அக்தர் இங்கிலாந்தில் கிளப் அணிகளுக்கு இடையிலான கவுண்டி கிரிக்கெட் போட்டி நடக்கிறது. வெர்செஸ்டர்ஷயர், நார்த் தாம்ப்டன் ஷயர் அணிகளுக்கு இடையே டெஸ்ட் போட்டி லண்டனில் நடக்கிறது. பாகிஸ்தான் 'எக்ஸ்பிரஸ் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் வொர்செஸ் டர்ஷயர் அணிக்காக விளையாடுகிறார்.

முதல்நாள் ஆட்டத்தில் நார்த்தாம்ப்டன்ஷயர் அணி 299 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதற்குக் காரணம் அக்தர். அவர் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. 47 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ஆறு விக்கெட்டை வீழ்தினார்.

# ஏ.டி.பி. டென்னிஸ் தொடர்
# தாய்லாந்து வீரருக்கு வெற்றி




ஏ.டி.பி., டென்னிஸ் தொடரின் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார் தாய்லாந்து வீரர் ஸ்ரீசாபன். முன்னணி வீரர்கள் பங்கேற்கும் ஏ.டி.பி இண்டியானா பொலிஸ் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் அமெரிக்காவின் இண்டியானா பொலிஸ் பகுதியில் நடக்கிறது.

தாய்லாந்து வீரர் பாரடோன் ஸ்ரீசாபன் இரண்டாம் சுற்றில் நேற்று முன்தினம் பங்கேற்றார். இந்தப் போட்டியில் அவர் 6-3, 7-6, (7/3) என்ற நேர் செட்டுக்களில் பிரான்ஸ் வீரர் கிரிகோரி காரசை வீழ்த்தி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார்.



# சின்சினாட்டி டென்னிஸ்
# சானியா ஆதிக்கம்

சின்சினாட்டி டென்னிஸ், இரட்டையர் பிரிவிலும் சானியா ஆதிக்கம் தொடர்கிறது. முன்னணி வீராங்கனைகள் மோதும் டபிள்யூ.டி.ஏ., டென்னிஸ் தொடர், அமெரிக்காவின் சின்சினாட்டி பகுதியில் நடக்கிறது. இந்தத் தொடரில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா பங்கேற்கிறார். ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில அபாரமாக முன்னேறிய சானியா, நேற்று முன்தினம் இரட்டையர் பிரிவிலும் கலக்கினார். இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சானியா, யூலியானா பெடக்( உக்ரைன்) ஜோடி 5-7,6-2, 6-0 என்ற செட்களில் சிபிலி பாம்மர் (ஆஸ்திரியா), ஸ்வல் பீட்டர்சன்) அமெரிக்கா) ஜோடியை வீழ்த்தினார். இரண்டாம் சுற்றுக்கும் முன்னேறினார். இரண்டாம் சுற்றில் இவர்கள அமெரிக்காவின் ஏஞ்சலா ஹெய்ன்ஸ்,பெத்தானி மேடக் ஜோடியை எதிர்த்து விளையாடுவார்கள்.

# அஸ்கிரிய டெஸ்ட் கிரிக்கெட்போட்டி
# பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம்



சிறிலங்கா- மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்று வரும்இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலாம் நாளான நேற்று சிறிலங்காவை 150 ஓட்டங்களுக்கு சுருட்டிய மேற்கிந்தியத்தீவு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் சந்தர்போல் சிறிலங்காவை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன்படி முதலில் ஆடிய சிறிலங்கா அணி 46.1 ஓவரில் 150 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சமரவீர 37, டில்சான் 36, முரளிதரன் 18 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பவல் ஐந்து விக்கெட்டுக்களையும், பெஸ்ட் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.




பதிலுக்குத்தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவு 41 ஓவர் நிறைவில் 92 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்தது. துடுப்பாட்டத்தில் டிநாரயின் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களையும் , ராமடீன் ஆட்டமிழக்காது எட்டு ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். சந்தர்போல் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் சமிந்தவாஸ் நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.




# ராபெல் நாடலுக்கு முப்பதாவது வெற்றி

மெர்சிடஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார் ராபெல்நாடல்.

பிரான்ஸ் நாட்டின் ஸ்டார்ட் கார்ட் நகரில் மெர்சிடஸ் கோப்பை டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நடந்தன. இதில் பிரெஞ்ச் ஓபன் சம்பியனான ஸ்பெயின் வீரர் நாடல் 6-1, 6-2 என்ற சுலப செட்களில் அமெரிக்காவின் அர்மென்டோவை வீழ்த்தி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார். களிமண் தரை மைதானங்களில் நாடல் பெறும் 30 ஆவது வெற்றி இது என்பது விஷேசம். இரண்டாம் சுற்றின் மற்றொரு ஆட்டத்தில் நிகோலெ டேவி டென்கோ 6-4,6-1 என்ற நேர் செட்களில் ஸ்பெயின் வீரர் ரூபென் ஹிடெல்கோவை வீழ்த்தினார்.

# இலங்கையின் 31 ஆவது தேசிய விளையாட்டு விழா
# வடகிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்.மாவட்ட அணிகள்

இலங்கையின் 31 ஆவது தேசிய விளையாட்டுவிழா கொழும்பில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

தேசிய விளையாட்டு விழாவில் பங்கு கொள்வதற்காக வடக்கு-கிழக்கு மாகாண வீரவீராங்கனைகள் கொழும்பு சென்றுள்ளனர். இந்தப் போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த கூடைப்பந்தாட்ட அணி ஆண், பெண்கள் இரு பிரிவிலும் மேசைப்பந்தாட்ட அணி ஆண், பெண் இரு பிரிவிலும் கிரிக்கெட்போட்டியில் மகளிர் அணியும் கலந்து கொள்ளவுள்ளன.

இதேவேளை வடகிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி யாழ்.மாவட்ட அணியே அனைத்துப் போட்டிகளிலும் பங்கு கொள்கின்றது. இந்தப் போட்டிகள் சுகததாஸ் விளையாட்டரங்கு, சென்தோமஸ் கல்லூரிமைதானம், கொழும்பு பல்கலைக்கழக விளையாட்டரங்கு ஆகிய விளையாட்டு மைதானங்களில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கீ)

# பெயர் விபரங்கள் கோரல்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான கால் பந்து அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தை உள்ளடக்கிய ஒவ்வொரு கழகங்களில் இருந்தும் நான்கு வீரர்களின் பெயர் விபரங்களை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் கோரியுள்ளனர்.

மேற்படி பயிற்சிகள் எதிர்வரும் வாரங்களில ஆரம்பமாகவுள்ளதால் கழகங்கள் காலதாமதமின்றி .பெயர் விபரங்களை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளன.

# பரு.லீக்கின் உதைபந்தாட்டம்;
# இன்றும் நாளையும் காலிறுதிகள்!

தமிழீழவிளையாட்டுத்துறை அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ் மாவட்ட ரீதியில் நடாத்தும் ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த சுற்றுப் போட்டியின் கால்இறுதியாட்டத்திற்கு பருத்தித்துறை சுடர் ஒளி அணி, மயிலங்காடு ஞானமுருகன் அணி, கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி, கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம், நவசக்தி விளையாட்டுக் கழகம், கருணாகரன் விளையாட்டுக்கழகம், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகள் கால்இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன. கால் இறுதியாட்டங்கள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன. (கீ)


# காதலியை கைப்பிடித்தார் ஹெவிட்



காதலியைக் கைப்பிடித்தார் டென்னிஸ் நட்சத்திரம் லெய்டன் ஹெவிட்.. சிட்னியில் உள்ள ஓப்ரா ஹவுஸ் வளாகத்தில் பலத்த கெடுபிடிகளுக்கு இடையே திருமணம் நடந்தது.

அவுஸ்திரேலிய டென்னிஸ் வீரர் லெய்டன் ஹெவிட், தற்போது ஆண்கள் டென்னிஸ் தரவரிசையில் இரண்டாம் இடம் வகிக்கிறார். விம்பிள்டன், யூ.எஸ்ஓபன் பட்டங்கள் கைப்பற்றியுள்ள ஹெவிட், பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் இடையே காதல் மலர்ந்தது.

திருமணநாள் எல்லாம் கூடமுடிவாகிவிட்ட நிலையில் ஹெவிட் கிளைஸ்டர்ஸ் ஜோடி கடந்த அக்டோபர் மாதம் திடீரெனப் பிரிந்தனர். பிரிந்த வேகத்தில், அவுஸ்திரேலியாவின் புகழ் பெற்ற மாடலிங் பெண்மணி பெக்கர்ரை (வயது-21) காதல் வலையில் சிக்கினார் தற்பொழுது அவரைத் திருமணம் செய்துள்ளார்.



## சிந்தனைக்கு

அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## வரலாற்று நாள்!

1983 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் நாள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகமுக்கியமான நாள் அன்றைய நிகழ்வொன்று இலங்கையில் அரசியல் இராணுவ ரீதியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதெனில் மிகையில்லை. அன்றைய நள்ளிரவில் தான் விடுதலைப்புலிகள் திருநெல்வேலியில் மேற்கொண்ட தாக்குதலில் 13 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின் உடனடி விளைவாக தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீது பாரிய இனவன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதோடு பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழர் உடமைகள் நாசமாக்கப்பட்டன.

இவ் இனவன்முறையில் அன்றைய சிறிலங்கா அரசாங்கம் பின்னணியில் இருந்தது என்பதற்கு போதிய சான்றுகள் இருந்தன. அதிலும் குறிப்பாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் இரு தடவைகள் தமிழ்க்கைதிகள் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டமை இப் படுகொலைகளில் அரசின் பங்களிப்பை அப்பட்டமாக வெளிக்காட்டியது.

அன்று வன்முறைக்கு இலக்கான பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கப்பல்களில் வடக்கிற்கு அனுப்பப்பட்டனர். இலங்கையில் இனமுரண்பாடு பற்றிச் சர்வதேசத்தின் கவனமும் திரும்பியது. இதேசமயம், இவ் வன்முறையின் பின்னான அரசியல் இராணுவச் சூழ்நிலையில் பெரும் மாற்றமும் ஏற்பட்டது.

குறிப்பாக, அன்றிருந்த விடுதலை இயக்கங்கள் பலவற்றிலும் பலநூற்றுக்கணக்கான இளைஞர்கள் இணைந்து கொண்டனர். ஆயுதப் போராட்டம் தீவிர முனைப்புப் பெற்றது. பல ரக ஆயுதங்களும் குவிந்தன. ஆயினும் அவர்கள் யாவரும் விடுதலைப்போராட்டத்தில் முழு அளவில் பங்காற்றினார்களா? அன்றி போராட்டத்தினை சரியான முறையில் வழி நடத்தினார்களா? என்பதும் கேள்விக் குரியதே.

ஏனெனில் பல இயக்கங்கள் பின்னர் அழிந்து போவதற்கும் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தில் இருந்து அவை திசைமாறி ஒடுக்கு முறையாளர்களின் தேவைகளுக்கேற்பச் செயற்பட்டமைக்கும் இயக்கங்கள் சரியான வழியில் வழிநடத்தப்படாமையே காரண மாகும்:-

இதன் விளைவானது பல நூற்றுக்கணக்கானோர்? ஏன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் - வழிமாறிச் செல்வதற்கும் இறுதியில் எதற்காகப் போராட விளைந்தார்களோ அதற்கு எதிராக செயற்படவும் வேண்டியதாகியது. அதாவது இனத்துரோகிகளாகி வாழவேண்டியதாகியது. இதற்கு இவ் இளைஞர்களுக்குத் தலைமை தாங்கியவர்களே காரணமாகும்.

ஆனால் மற்றொரு புறத்தில் விடுதலைப்புலிகளின் தலைமை யினால் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் பல சவால்களின் மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டது. இவ் உரிமைக்கான போராட்டத் தில் பல ஆயிரக்கணக்கான மாவீரர்கள் வீரகாவியமானார்கள். இவர்களின் அர்ப்பணிப்பினாலும் தியாகத்தினாலும் இன்று உரிமைக்கான போராட்டம் ஒரு மைல் கல்லை தொட்டிருக்கின்ற தெனலாம்.

குறிப்பாக தமிழர் தாயகத்தின் பெரும்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு அங்கு ஒரு அரசகட்டமைப்பு உருவாக்கப்பட்டு வளர்ச்சி பெற்று வருகின்றது. நீதி, நிர்வாகம், வங்கி உட்பட வேறு நிர்வாக அலகுகள் நிர்மாணம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.

இன்று விரும்பியோ விரும்பாமலோ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் விடுவிக்கப்பட்ட பிரதேசம், அதற்கான நிர்வாகம் சட்டம்-ஒழுங்கு உட்பட டல்வேறுபட்ட துறைகளுக்குமான அமைப்புக் கள் செயற்பட்டு வருவதைப் பலரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தாகவே உள்ளது. சிறிலங்காவின் பிரதம நீதியரசரில் இருந்து பல சர்வதேச அமைப்புக்கள் வரையில் இலங்கையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் அங்கீகரிக்கப்படாத ஓர் அரசு செயற்படுவதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இது ஒரு புறம் இருக்க தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை ஆயுதமுனையில் இரும்புக்கரம் கொண்டு நசுக்கிவிட முடியும் என கடந்த காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் அதில் வெற்றிபெற முடியாது என்பது மட்டுமல்ல, மீண்டும் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால், இலங்கையில் தமிழருக்கென ஒரு நாடு உருவாகி விடுமோ என்ற அச்சத்தையும் கொண்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் மீது இன வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டவர்கள் இன்று தமிழ்மக்கள் மீது விரும்பியவாறு அராஜகத்தை கட்டவிழ்த்து விட முடியாத அளவிலேயே உள்ளனர். ஏனெனில் இதன் எதிர்விளைவானது பெரிதும் பாரதூரமானதாக இருக்கும் என்பது அவர்களுக்கு நன்கே தெரியும்.

இந்நிலையில் சர்வதேச நாடுகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பது அவசியமானது என உணர்ந்து கொண்டுள்ளமைக்கும் - தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் நியாயப்பாடு உள்ளதென்பதை விளக்கிக்கொள் வதற்குமான அளவில் போராட்டத்தை வளர்ச்சியடையச் செய்தமைக்கும் 1983 யூலைத் தாக்குதலே அடிப்படையாகியது எனின் மிகையில்லை.

# எந்த நோக்கத்திற்காக தமிழர் ஆயுதம் ஏந்தினார்களோ அதை அடையப் பெறும் வரை போராடியே தீருவோம்

## - கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(கொழும்பு)

எந்த நோக்கத்திற்காக தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப்போராடினார் களோ அந்த இலக்கை அடையும் வரை இறுதி வரை போராடியே தீரு வோம் என்று மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அண்மையில் காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயத்தில் நடை பெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:, கடல்கோள் நிவாரணப் பணிக்காக பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட் டது. அந்தப் பொதுக்கட்டமைப்பைக் கூட சிங்களப் பேரினவாதிகள் எதிர் த்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இதேவேளை அவர்களிற்கு நிகராக எமது முஸ்லிம் சகோதரர்களும் பிழையான வழிநடத்தலின் மூலம் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். முஸ்லிம்கள் எந்த விதத்திலும் பொதுக்கட்டமைப்பினை எதிர்க்கவோ வழக்குத் தாக்கல் செய்யவோ அவசியமில்லை. அவர்களுக்கு உரிய சகல அதிகாரங்களும் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டுள் ளது. மூன்றாம் தரப்பாக கையொப்பம் இட வேண்டுமெனக் கோருவதில் நியாயமில்லை. முஸ்லிம்கள் கூடு தலாகப் பாதிக்கப்பட்டதாகக் கூறுகின் றனர். வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் 63 வீதம் பாதிக்கப்பட்டுள்ளனர். அம் பாறையில் மட்டுமே முஸ்லிம் மக்கள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை. சிறிலங்கா அர சிற்கு சரிநிகராக கையொப்பம் இடு முரிமை விடுதலைப்புலிகளுக்கே உண்டு. இதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த மூன்று தசாப்தமாக போராடி 17.500 இற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ள னர்.

நாங்கள் முஸ்லிம் மக்களை பகைக்கவில்லை. அவர்களிற்கும் எமக்கும் உள்ள உறவை எப்போதும் பாதுகாத்து வளர்த்துக்கொள்ளவே விரும்புகின்றோம். ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகள் திட்டமிட்டுக் குழப்பிவருவதுடன் அடுத்த தேர்த லுக்கு ஒவ்வொருவரும் முண்டிய டித்து சுய இலாபத்திற்காக மக்க ளைப் பயன்படுத்துவதை இவர்கள் கைவிட வேண்டும். எமது தேசியத் தலைவர் தமிழ்மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு தமிழ் மக்கள் நசுக்கப் பட்டு ஒடுக்கப்பட்ட போது ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்தார். அந்தப் போராட்ட வரலாற்றில் எல்லைக்கிராம மக்கள் சொல்லொணாத்துன்பங்களை சிங்களக் காடையர்களால் அனுபவித் துள்ளனர்.

அவர்கள் எல்லைக்காவல் தெய் வங்களாக செயற்பட்டுள்ளனர். அவர் களின் நலனில் ஒவ்வொருவரும் அக் கறையுடன் செயற்பட வேண்டும் என்றா.

# முன்னாள் இராணுவத்தளபதியின் மகனை விசாரணைக்குட்படுத்த வேண்டும்

## -ஐ.தே.கட்சி பா.உறுப்பினர் ராஜித சேனாரட்ண கோரிக்கை

(கொழும்பு)

புலனாய்வுத்துறை அதிகாரி லெப்ரினன்ட் கேணல் நிசாம்றுவான் முத்தலிப்பின் கொலை தொடர் பாக முன்னாள் இராணுவத்தளபதி லயனல் பலகல்லவின் மகனை விசார ணைக்குட்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண வலி யுறுத்தியுள்ளார்.

கொலைச் சந்தேகநபரான சஞ்சீவ விற்கு ஊடகவியலாளர் அடையாள அட்டை வழங்கிய அரசாங்கமே இப்படு கொலைக்குப் பொறுப்பேற்க வேண் டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முத்தலிப்பின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப் பினர் மித்திரபால ஏக்கநாயக்க சமர்ப் பித்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ராஜித சேனா ரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

சஞ்சீவ எந்த ஒரு சந்தர்ப்பத் திலும் ஐக்கிய தேசியக்கட்சியில் இருக்க வில்லை. சி.ஐ.டி பொலிசார் தமது விசாரணை அறிக்கையில் கூட இது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் அரசியல் வாதிகளுக்கும். பத்திரிகையாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படு கின்றன. இருவருமே நேரகாலம் பாராது உழைக்கின்றனர். அந்தவகை யில் சஞ்சீவவை பத்திரிகையாளர் என்ற வகையிலேயே எனக்குத்தெரி யும். சஞ்சீவிற்கு ஊடகவியலாளர் அடையாள அட்டை வழங்கியது யார்? அரசாங்கத்தகவல் திணைக்க ளம். அதற்குப் பொறுப்பான அமைச் சர் யார்? மங்கள சமரவீர. 2005ஆம் ஆண்டு அவர் ஒரு பத்திரிகைகூட வெளியிடவில்லை. அவருக்கும் அடையாள அட்டை வழங்கியது மங் கள சமரவீரவின் செயலாளர் றுவான் மெண்டிஸ் தான். சஞ்ஜீவ பலகல்ல வின் மகனுடன் தான் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தார். பல கல்லவை நாம் தோல்வி அடைந்த தளபதியாகக் கருதி அவரை பதவியி லிருந்து அகற்ற நடவடிக்கை எடுத் திருந்தோம். ஆனால் சனாதிபதிதான் அவரை இராணுவத்தளபதியாக நிய மித்தார். இப்போது அவரை வெளி நாடொன்றின் தூதுவராகவும் நியமித் தவர் சனாதிபதியேதான். மில்லே னியம் சிற்றி ஆயுதக்களஞ்சியத்தைப் பற்றியும் பலர் இங்கு பேசினார்கள். மில்லேனியம் சிற்றிக்குப் பொறுப்பாக இருந்தவர் ஜானகபெரேரா. அவரை தேசத்துரோகியென கூறிவந்த ஜே.வி.பி. இப்போது அவருடன் இருநத நபர்களை தேசாபிமானிகள் என போற்றிவருகின்றனர். இன்றைய இராணுவத்தளபதி புலிகளிற்கு எதி ராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை புலிகளுடன் உறவுகளைப் பேணி வருகின்றார் என ராஜித சேனாரட்ண மேலும் தெரி வித்துள்ளார்.

# பாராளுமன்ற பொதுக்கணக்குக் குழு முன் ஆஜராக முடியாதென ஜயசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நீதிமன்றங்களில் ஐந்து வழக்குகள் விசாரணையில் இருப்பதால் பாரா ளுமன்ற பொதுக்கணக்குக்குழு முன் பாக ஆஜராகி விளக்கமளிக்க முடியா தென புனர்வாழ்வு,நிவாரண நல்லி ணக்க அமைச்சின் செயலர் எம்.எஸ் ஜயசிங்க பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு செயலருக்கு அறி வித்துள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையி லான பொதுக்கட்டமைப்பில் அரசதரப் புப் பிரதிநிதியாக புனர்வாழ்வு அமைச் சின் செயலர் ஜயசிங்க கையெழுத் திட்டதால் பாராளுமன்றத்திற்குள்ள பொது நிதி தொடர்பான அதிகாரம் மீறப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அவரை பாராளுமன்ற பொதுக்கணக் குக்குழு முன்பாக அழைத்து விளக் கம் கோரவேண்டுமெனவும் ஜே.வி. பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இக்குழுவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து புதன்கிழமை பாராளுமன்ற பொதுக்குழு முன்பாக ஜயசிங்கவை ஆஜராகுமாறு அறி விக்கப்பட்டிருந்த போதும் பொதுக் கட்டமைப்பு தொடர்பாக மாவட்ட நீதிமன்றில் ஒருவழக்கும், உயர்நீதி மன்றில் நான்கு வழக்குகளும் விசார ணையிலிருப்பதால் தன்னால் பொதுக் கணக்குக்குழு முன்பாக ஆஜராகி விளக்கமளிக்க முடியாதென ஜய சிங்க பாராளுமன்ற பொதுக்கணக்குக் குழு செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

## திருநெல்வேலியில்...

குரல் எம்மை வரவேற்றது.

எல்லோரும் தம்பியை சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டு ஆயுதங்களைப் பொறுக்கத் தொடங்கினோம்.

இதற்கிடையில் பொன்னம்மான் அதீத மகிழ்ச்சியுடன், இறந்து கிடந்த இராணுவத்தினரின் 'ஹெல்மெட்' டைத் தலையில் போட்டுக்கொண்டு, 'ட்ரக்'கின் கீழே இறந்து கிடந்த இராணுவ வீரர்களி னது ஆயுதங் களைத் தேடி எடுத்துக் கொண்டான்.

இத்தாக்குதல் இரவு நேரமாதலால் எம்மையும் இராணுவத் தினரையும் வேறு பிரிக்க நாம், 'ஹெல்மெட்'டைத்தான் குறியீடாகப் பாவித்தோம். 'ஹெல்மெட்' டுடன் ஓர் உருவம் நகர்வதைக்கண்ட தம்பி உடனடியாகத் துப்பாக்கியைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்து "யாரது" என்று வினாவ அம்மான், "அது நான் தம்பி" என்றவாறு தன் தவறை உணர்ந்து 'ஹெல்மெட்'டைக் கழற் றினார்.

பொன்னம்மானைச் செல்லமாகக் கண்டித்தவாறு எல்லாரையும் சரிபார்க்குமாறு தம்பி பணிக்க, "அம்மானைக் காணவில்லை" என்று, விக்ரர் கத்தினான். விக்ரரும், புலேந்திரனும் அம்மான் நின்ற கடையின் மேல் ஏறினர். "டேய் அம் மானுக்கு வெடி விழுந்திட்டுது" என்ற விக்ரரின் குரல் எங்கும் எதிரொலித் தது, எல்லோரும் அங்கே ஓட நான் வானை எடுத்து வந்தேன்.

வானில் அம்மானை ஏற்றும்போது அம்மானின் உடல் குளிர்ந்துவிட்டது.

வான் புறப்படத் தொடங்க, மழையும் மெதுவாகத் தன் கரங் களால் வாழ்த்துத் தெரிவித்தது எமக்கு. செல்லக்கிளி அம்மானின் மரணத்திற்காக இடியும், மின்னலும் சேர்ந்து இறுதி வணக்கம் செலுத்த, வான் எமது முகாம் நோக்கிப் பறக்கிறது.

நன்றி - களத்தில்

# எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளாவோர் தொகை சென்ற ஆண்டைவிட உயர்வு!

## யுனிசெப் அதிகாரி தகவல்

(கொழும்பு)

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் எச்.ஐ.வி.தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் இலங்கையில் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் எச். ஐ. வி திட்டத்தின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஹரிச்சந்திரா யக்கண்டவல தெரிவித்துள்ளார்.

எம் வசம் இருக்கும் தகவலின்படி இதுவரை இலங்கையில் எச். ஐ.வி. தொற்றுக்காரணமாக மரண மானவர்களின் எண்ணிக்கை 130 எனத் தெரிவித்த அவர், கடந்த ஆண்டு முதல் கால் ஆண்டுப்பகுதியில் இந்த தொற்றுக்கு உள்ளானவர்களின் தொகை 20 எனத் தெரிவித்தார்.

ஆனால் இந்த ஆண்டு முதல் காலாண்டுப்பகுதியில் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 35 வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 3500 எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நோயைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இந்த நோய் தொடர்பாக எமது இள வயதினருக்கு புரிந்துணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

இளைஞர்களுக்கு இந்த நோய் தொடர்பான சகல தகவல்களையும் வழங்க வேண்டியதும் அவசியமாகிறது.எமது கலாச்சார பாரம்பரியத்திற்கு அமைய இப்படியான தகவல்களை வெளிப்படையாகத் தெரிவிப்பதில் சில இடர்பாடுகள் எமது சமூகத்தில் இருக்கின்றன.

இந்தத் தடையை அகற்றி சகல விபரங்களையும் எமது இளைஞர்களுக்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பாரவூர்தி தடம்புரண்டது சாரதி நசுங்கிப் பலி!

## ~துன்னாலையில் நேற்று சம்பவம்

(வடமராட்சி)

வடமராட்சி துன்னாலை கலிகைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மாணிப்பாய் பகுதியைச் சேர்ந்த காந்தன் (வயது-26)என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

அவரது சடலம் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் நெல்லியடிப்பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், வடமராட்சி கிழக்கின் மணற்காடு பகுதியிலிருந்து மணலை மானிப்பாய் பகுதிக்கு ஏற்றிச்சென்ற பாரவூர்தியொன்று தடம்புரண்டு, வயல்வெளியினுள் வீழ்ந்துள்ளது. அவ்வேளை குறி ௩ பாரவூர்தியைச் செலுத்தி வந் ுரானசாரதியான காந்தன் என்பவரே நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

விபத்துத்தொடர்பாக நெல்லியடிப் பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் ஒப்படைத்திருந்தனர். (27)

# டீசல் மீதான 'வற்' வரி நீக்கம்

டீசலுக்கு விதிக்கப்பட்ட 15 வீத வற்வரி அரசினால் நீக்கப்பட்டுள்ளது என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக மாநாட்டில் சிறிலங்காவின் நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

மேலும்இலங்கைமின்சார சபையை மீளமைப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (32)

# நிவாரண நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா 57 மில்.டொலர் உதவி

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதியாக கூடுதலாக 57 மில்லியன் டொலரை வழங்குவது தொடர்பாக அமெரிக்காவும் சிறிலங்காவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன.

இது தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெ.்.ப்ரி ஜெ, லான்ஸ்டெட், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவன இயக்குனர் கரோல் பெக்கர் ஆகியோர் இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் திங்கட்கிழமை அறிவிக்கவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

# தென்மராட்சியில் நேற்று இருவேறிடங்களில் இராணுவ வாகனங்கள் மோதி மூவர் படுகாயம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் நேற்று இரண்டு இடங்களில் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்துக்களில் பொதுமக்கள் மூவர் படுகாயமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மதியம் ஒரு மணியளவில் சாவகச்சேரி அரசடியில் இராணுவத்தினர் ஓட்டிவந்த அதிவேக உந்துருளியும், மற்றுமொரு உந்துருளியும் எதிரெதிரே மோதிக்கொண்டதில்.

இடைக்குறிச்சியை சேர்ந்த யசிந்தன்(வயது-26)என்பவா படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதானா வைத்தி யசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மற்றும் மாலை மூன்று மணியளவில் மீசாலை பகுதியில் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த செல்வப்பெருமாள் இராசதுரை (வயது-35) என்பவரும் இராணுவ ரக் ஒன்று மோதியதில் படுகாயமடைந்திருப்பதுடன் அருகில் வந்த ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளானதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவங்களால் இப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

# மனிதாபிமானப் பணிகளையும் நிறுத்த பல்கலை கல்விசாரா ஊழியர்கள் முடிவு

## –துணைவேந்தரின் நடவடிக்கைக்கும் ஆட்சேபம்

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்விகலாச்சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று 25 ஆவது நாளாக தொடர்வதுகுறித்து நேற்று யாழ்.பல்லைக்கழக ஊழியர்சங்கப் பொதுச்சபை கூடி ஆராய்ந்தது.

பல்கலைக்கழக ஊழியர்களின் பணிகளைவெளியார் மூலம் ஆற்றும் துணைவேந்தரின் நடவடிக்கைகளை ஊழியர்சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

போதனை சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைப் பயன்படுத்தி தமது கடமையில் ஒழுங்கீனமாக வரவுகளைக் கொண்டிருந்த அதிகாரிகள் சிலர்மீது துணைவேந்தர் நடவடிக்கை எடுக்க தவறியதோடு மட்டுமன்றி அவர்களுக்கு ஜுலை மாதச் சம்பளத்தையும் வழங்கியுள்ளார். அனுமதிபெறாமல் கொழும்பு சென்ற அதிகாரி ஒருவருக்கும் இவ்வாறு சம்பளம் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தாங்கள் ஆற்றிவரும் சகல மனிதாபிமானப் பணிகளையும் இடைநிறுத்த ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது. பாதுகாப்பு ஊ்ழியர்களின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மறு அறிவித்தல்வரை இடம்பெறும். போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு முன்னர் மாணவர்களின் ஒரு தொகுதியினரின் பரீட்சை முடிவுகளை வெளியிடுமுகமாக பரீட்சைக் கிளை ஊழியர்கள் சிலர் கடமைபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பல்கலைக்கழக ஊழியர்சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிசாம் முத்தலிப் கொலையில் இராணுவஅதிகாரிகளுக்குத் தொடர்பு

சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை கட்டளையதிகாரி லெப்டினன் கேணல் நிசாம் முத்தலிப் கொலையில் இராணுவ அதிகாரிகள் மூவருக்குத் தொடர்பிருப்பதாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்குரிய மூன்று இராணுவ அதிகாரிகளும் இனந்தெரியாத நபர்களை கொத்தலாவல இராணுவ அக்கடமிக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் இராணுவ அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டோருக்கும், முத்தலிப் கொலையாளிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் கைதாகியிருக்கும் ஊடகவியலாளர் சஞ்சீவவுடன் வேறு சில இராணுவ அதிகாரிகளுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாகச் சந்தேகத்துக்குரிய அனைத்து இராணுவ அதிகாரிகளிடமும் குற்றப்புலனாய்வுப்பிரிவு விசாரணை நடத்த உள்ளது. இந்த நிலையில் தனது மகனான இராணுவ அதிகாரிக்கும் முதலிப்பின் கொலைக்கும் தொடர்பில்லை என முன்னாள் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (32)

## பொதுக்கட்டமைப்பின்..

இதேவேளை பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான வழக்கினை விசாரணை செய்யும் அதிகாரம் மாவட்ட நீதிமன்றத்திற்கு இருக்கின்றதா? இல்லையா? என்பது தொடர் பான உத்தரவு அடுத்த மாதம் 15ஆம் திகதி பிறப்பிக்கப்படுமென கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.எச்.சுமித்ரபால நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், தேசிய பிக்கு முன்னணி என்பன தனித்தனியாகத் தாக்கல் செய்துள்ள மூன்று மனுக்கள் மீதான விசாரணை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விசாரணையின் போதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## இனம்...

இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிசார் 37 வயதுடைய எம். வீரசிங்க என்றும் பொதுமகன் கூலித்தொழிலாளியான 23 வயதுடைய கனகசபை ரஞ்சித்குமார் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொலிசாரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே குறிப்பிட்ட பொதுமகனும் உயிரிழந்ததாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும், பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட பதில் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர் பலியானதாக அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

## புலிகளின்...

அவர் தொடர்ந்து கூறுகையில்; விடுதலைப் புலிகள் கோருவதற்கும் வழங்குவதாகக் கூறப்படும் பாதுகாப்பிற்கும் இடையே இடைவெளி இருக்கிறது. தமக்கு எப்படியான பாதுகாப்பு வேண்டும் என்று தெரிவித்து அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் யூன் 30 ஆம் திகதி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பதிலாக எப்படியான பாதுகாப்பு வழங்கப்பட முடியும் என்று யூலை 11 ஆம் திகதி பதிலளிக்கப்பட்டிருந்தது. இவை இரண்டிற்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன். இது விடயத்தில் சாதகமான முடிவு கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் சம்பவம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில; அம்பாறையில் கடந்த இரு தினங்களில் நடைபெற்ற சம்பவத்தைத் தவிர வடக்குக் கிழக்கு நிலமைகள் அமைதியாகவே இருக்கின்றன என்றார்.

சுனாமி பொதுக்கட்டமைப்பின் ஸ்தம்பித நிலை பற்றி ஹொக்லண்ட் கருத்துக் கூறுகையில்; இந்நிலைபற்றி நாம் கவலைப்படுகின்றோம். ஆனால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இது தொடர்பில் செய்வதற்கு ஒன்றும் இல்லை. இந்தப் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய பணி அரசுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடையதாகும். ஆகவே இது தொடர்பாக அவர்களிடமும் மத்தியஸ்தர்களிடமும் தான் கேட்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## பாதுகாப்புக்கு...

விடயங்கள் அடங்கிய மனுவொன்றை சனாதிபதியிடம் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண படை அதிகாரிகளின் திடீர் இடமாற்றங்கள் சம்பந்தமாக தாங்கள் இதன்போது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தவுள்ளதாக அழுத்கமகே தெரிவித்துள்ளார்.

## தமிழரின்...

இந்தப் பேரணியை முல்லைத்தீவு நகரப்பகுதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை வெகுசன அமைப்புகளின் ஒன்றியமும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களும் இணைந்து செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

## புல்லுமலை...

பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பட்டைகள் 1,060, கறுப்பு துணிச்சுருள் பத்து, வெள்ளை துணிச்சுருள் நான்கு, எரிபொருள் பீப்பாய்கள், கம்பிச்சுருள் 240, வெற்றுக் கான்கள் ஆறு ,16வெற்றுப் பீப்பாய்கள், இரண்டு கோணிப்பை கயிறு ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்பாரவூர்தியில் சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவ்விருவரும் தமிழர்களாவர். விசாரணைகளில் இந்த பாரவூர்தி கொழும்பு ஆட்டுப்பட்டித்தெருவிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

## இரு...

செய்துகொண்டிருந்தபோது வீதித்தடையில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்ட போது ரி-56 ரக துப்பாக்கிக்குரிய மகசீன்-01 அதற்கான 40 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் இதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டதாக சம்மாந்துறை பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இருவரையும் எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது